



# கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி (பா.உ.) அவர்களின்



# பாராட்டு விழா வாழ்த்து மலர்






வெளியீடு :

**பாராட்டு விழா மலர்க்குழு**

யாழ்ப்பாணம்

19-12-2003

உ

Felicitation Souvenir of
Hon. A. Vinayagamoorthy LL.B
Attorney - at -Law
Member of Parliament - Jaffna District



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும்,
சட்ட நிபுணரும், யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய
கௌரவ **அப்பாத்துரை விநாயகமூர்த்தி** LL.B அவர்கள்
அரசாங்க சேவையிலும் சட்டத்தரணிப் பணியிலும்
52 வருடங்களிற்கு மேலாக ஆற்றிவரும் பொதுச் சேவைகளைப்
பாராட்டி கௌரவிக்கும் முகமாக அவர்களுடைய
70வது அகவை நிறைவு நாளன்று நடாத்தப்படும்
பாராட்டு விழாவில் வெளியிடப் பெற்ற

# வாழ்த்து மலர்

19—12—2003

வெளியீடு : பாராட்டு விழா மலர்க்குழு

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

காலம் : 19-12-2003 , வெள்ளிக்கிழமை

அச்சுப்பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினர், கொழும்பு

பாராட்டு விழா மலர்க்குழு :

திரு. அ. குமாரவேல் B.A
(விரிவுரையாளர்)

திரு. ஆறு திருமுகன் B.A
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி)

திரு. சோ. சந்திரசேகரம்
(பிரமுகர் அ.இ.த.கா)

செல்வன். ந. ஐங்கரன்
(மாணவன், யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனம்)

உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி: 021-222 2870


24.11. 2003

## அருளாசிச் செய்தி

அன்புசால் பெருந்தகையீர்,

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் தனது 70வது அகவையினை நிறைவுசெய்வதையிட்டு எமது உளம்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

திருமிகு. விநாயகமூர்த்தி அவர்கள் தலைசிறந்த அரசியல்ற் தலைவராக திகழும் அதேவேளை நிறைவான ஆன்மீக நாட்டங்கொண்டவருமாவார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தனித்துவத்தை பேணிப்பாதுகாக்கக்கூடிய ஆழுமைமிக்க ஒரு தலைவர். யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற்ற, சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான தனது முழுமையான பங்களிப்பை வழங்கிவரும் ஓர் அரசியல்வாதி. தமிழ் பேசும் மக்களின் பல்வேறான பிரச்சனைகளின் போதெல்லாம் அநீதிக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து நீதிகேட்கும் ஒரு சிறந்த சட்டத்தரணி. இவருடைய பிறந்த தினத்தினையொட்டி விழா எடுக்கும் ஏற்பாட்டுக் குழுவினரது பணி வரவேற்கத்தக்கது.

திருமிகு. விநாயகமூர்த்தி அவர்கள் பல்லாண்டு காலம் நலமோடு வாழவும் மக்களுக்கு தொடர்ந்தும் நற்பணியாற்றவும் இறைவன் ஆசீர்வதிப்பானாக. இந்த விழா சிறப்புற நடைபெறவும் இவ்விழாவின் ஏற்பாட்டுக் குழுவினரை இறைவன் ஆசீர்வதிக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

"அன்பறிவு தேற்ற மவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு"



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

தலைவர் :

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**

President: திகதி : 01-12-2003

**Durgaduranthari, Sivathamilselvi**

**Dr. Miss Thangammah Appacuddy, J. P.**

## வாழ்த்துரை

## உயர் திரு. அ. விநாயகமூர்த்தி அவர்கள்

இம்மாதம் 19ந் திகதி எழுபது அகவையை நிறைவு செய்யும் உயர் திரு. அ. விநாயகமூர்த்தி அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவராகப் பணிபுரிபவர் இவர். அத்துடன் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் என்னும் பெருமைக்கும் உரியவர். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற குறிக்கோளோடு சிந்தித்துச் செயலாற்றுபவர் இவர். இவருடைய வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் ஒவ்வொன்றும் மக்களின் நலனை நோக்குபவை. கடவுள் நம்பிக்கையும் கண்ணியமும் கொண்ட தலைவர் இவர். இப் பெரியாருடைய ஆளுமையினால் ஈழத்தமிழ் மக்கள் வலுப் பெறுகின்றனர். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்த ஒரு உத்தமர் இவர். இப்பெரியாருடைய பிறந்த தினத்தில் வாழ்த்துக் கூறி மேலும் பல்லாண்டு காலம் சுகத்துடன் வாழ்ந்து இம் மண்ணை வளம் படுத்தவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*
*சமாதான நீதிபதி*
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை ஸ்ரீ லங்கா*

**"ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந்தார்"**

குறள் 952

**Rt. Rev. Dr. Thomas Savundaranayagam**
*Bishop of Jaffna*

*Bishop's House*
*P.O.Box 2*
*Jaffna - Sri Lanka.*
*Tel :021- 222 2161*

அன்புச் சகோதரங்களே,

> **"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
> **திறனறிந்து தேர்ந்து கொளல்"**

என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாய் தகமையால் உயர்ந்த உயர்திரு.அ.விநாயகமூர்த்தி அவர்கள் எழுபதாம் அகவையைக் கடக்கும் இத் தருணத்தில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் சார்ந்திருக்கும் அகில இலங்கைக் காங்கிரஸ் கட்சி எமது மண்ணிலும் மக்கள் மத்தியிலும் எமது தற்போதைய வரலாற்றிலும் பாரிய சமூகப் பரிமாணமும் நீண்ட கால அரசியல் பாரம்பரியமும் கொண்டது. தமிழ் மக்கள் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையில் உள்ளார்கள். போரற்ற சூழல் நிலையான போதிலும் சமாதானம் மலர தங்களது வரலாற்று கடமையை இவ்வேளையில் குறிப்பிடுவது நல்லது என எண்ணுகிறேன்.

மனித வாழ்வு என்பது இறைவனின் கொடையே. நீண்டகாலத்து அகவையும் எல்லா நலனும் கிடைக்க இறைவனை மன்றாடுகின்றேன்.

இறைபணியில் உங்கள் ஆயர்

+ தி. தோமஸ் சவுந்தரநாயகம்

பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

> **"சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூ உங்கு**
> **ஆக்கம் எவனோ உயிர்க்கு"**

குறள் 31

# வீரம் மிகுந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்

**யா**ழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. அ. விநாயகமூர்த்தி அவர்கள் 70வது அகவையை எட்டுகின்ற பொழுது மலர் ஒன்றினை வெளியிட அவரின் அன்பர்களும் ஆதரவாளர்களும் முயற்சிகள் மேற்கொண்டு வருவது கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

திரு. விநாயகமூர்த்தி அவர்கள் டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவர். எனது பெற்றோரிடம் தமிழ் ஆங்கிலம் என்பனவற்றைக்கற்றவர். நன்றி நிறைந்த உள்ளமுடையவர்.

அவர் பாராளுமன்ற உறுப்பினரான பின்புதான் அவருடன் நெருங்கப்பழகுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவருடைய துணிவும் மனோதிடமும், பேச்சாற்றலும் உரிமைப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு சமுதாயத்தின் வரப்பிரசாதம். பாராளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும் அவரின் வீர உரைகளைக் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். ஆழமாகச் சிந்தித்து தக்க ஆதாரங்களுடன் கேட்பார் சிந்தையினிக்க செவியினிக்கப் பேசுபவர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள்

"***சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை***
***இகல்வெல்லல் யார்க்கும் அரிது***"

என்றார் வள்ளுவப்பெருந்தகை

திரு. அ. விநாயகமூர்த்தியவர்கள் துணிவுடன் பேசுகின்றார். சொல்லின் செல்வராக விளங்குகின்றார். அவர் தொடர்ந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் முக்கிய பங்குவகிப்பார் என்பது உறுதி.

திரு. விநாயகமூர்த்தி அவர்கள் நீடூழி வாழ்ந்து சமூகசேவையிலும் அரசியலிலும் பங்காற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வணக்கத்திற்குரிய பேராயர்
கலாநிதி எஸ். ஜெபநேசன்
தென்னிந்தியத் திருச்சபை
யாழ் ஆதீனம்,
வட்டுக்கோட்டை..

உ


ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்
**SRI NAGAVARATHA NARAYANAR THEVASTHANAM**

அருட்கவி சீ. விநாசித்தம்பி M. A.
ARUDKAVI S. VINASITHAMBY M. A.

நாகேஸ்வரம், NAKESWARAM.
அளவெட்டி. ALAVEDDI.
(இலங்கை) (Sri Lanka)

தொலைபேசி: 070-212896


திகதி / Date } 2/12/2023

# சங்கரன்போல் மங்களமாய் வாழி! வாழி!

அன்புவளர் சரசாலைப் பதியின் வாசன்
அருள் அப்பாத் துரைதவத்தால் பெற்றமைந்தன்
பொன்வளரும் புகழ்விநாயக மூர்த்தி யென்னும்
புண்ணியனே தமிழினத்தின் விடிவுக்காக
முன்புவளர் தெய்வீகத் துணையினோடு
முன்னின்று பெருவாதம் புரியும் செல்வா
இன்பமுயர் தமிழருக்கோர் கற்பகம் போல்
எந்நாளும் சூரியன்போல் வாழிவாழி!

எழுபதாம் அகவையினை அடைந்தாயேனும்
இளமுருகன் போலவே நினைக்காண்கின்றோம்
பொழுதெல்லாம் சமுதாய நீதி நேர்மை
பொங்கிவரும் சமாதானம், சமயமாட்சி
வழுவாது பெறுவதற்காய், நியாயம் பேச
மகிமைமிகு பாராளு மன்றம் சென்றாய்
வழிகாட்டும் எழில்நியாய வாதிச் சேவை
மன்னவனே மனுச்சோழன் போலவாழி!

மனங்குளிரும் விநாயக மூர்த்தியென்னும்
வள்ளலே நின்சேவை, மலைவிளக்காய்
இனங்குளிரும் பயன்நல்கி, தமிழினத்தார்
இதயத்தில் சுய ஆட்சி நெறியில்வாழ;
கனங்குளிரும் சமரசசன் மார்க்க மென்னும்
கண்ணியமாய் மக்களெலாம் சிறந்து வாழ;
தனங்குளிரும் தன்னிகரில் லாத்தலைவன்
சங்கரன்போல் பல்லாண்டு வாழிவாழி!

அருட்கவி
[signature]
*சீ. விநாசித்தம்பி* M.A

# இறையாசீர் என்றும் தங்களுடன் இருக்க என் ஆசிகள்

இந்த அவனியிலே 70வது அகவைதனைப் பூர்த்தி செய்யும் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களை வாழ்த்தி இச்செய்தியினை வழங்கவும் அவரைப் பற்றி சில வரிகள் எழுதவும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மையில் அவர் ஒரு தூய்மையான சமூக சேவையாளன் என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது என்று நான் கருதுகின்றேன். ஏனெனில் இன்றைய காலகட்டத்தின் அரசியலும் அரசியல்வாதிகளும் நாட்டு மக்களின் நலனில் அக்கறை இன்றி காணப்படுகின்ற இவ்வேளையில் ஒரு அரசியல்வாதி பதவிக்கு அடிமைவாதியாக அன்றி அன்புவாதியாக, உண்மைவாதியாக வாழ வேண்டுமென்ற நோக்கோடு வாழ்ந்து வருகின்றார். உண்மையில் இவர் ஒரு பணியாளனுக்கே உரித்தான பாணியில் மக்களோடு மக்களாக பல ஆபத்துக்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் மக்களைத் தேடி சென்று அவர்களின் குறைகளைப் போக்குவதில் தணியாத தாகம் கொண்டு காணப்படுகிறார்.

பயங்கரவாத முத்திரை குத்தி கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் சிக்குண்ட எத்தனையோ அப்பாவித் தமிழ் இளைஞர்களை, முதியவர்களை வக்கீல் கட்டணம் எதுவும் அறவிடாது இலவசமாக விடுவித்தார். இன்றும் பிரதி சனிக்கிழமை தோறும் சிறைகூடங்களுக்குச் சென்று கைதிகளை சந்தித்து அவர்கள் குறைகளை கேட்டறிந்து அவர்களை விடுதலை செய்து புதுவாழ்வு கொடுப்பதற்கு அயராது பாடுபடுகிறார் என்பதை அறிகின்ற போது பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு நான்கைந்து தடவைகள் வருகை தந்து என்னை சந்தித்து என்னோடு ஒரு சகோதரர் போல் உரையாடியிருக்கின்றார். இவரை நேரில் சந்தித்த போது இவரிடம் எவ்வித பதவிச் செருக்கோ, புகழாசையோ, தற்பெருமையோ எதுவும் இல்லாது உண்மையான பணியாளனுக்குரிய உயர்ந்த பண்புகளை என்னால் காணமுடிந்தது. ஒரு தனிப்பட்ட மனிதன் போல் எம்மிடம் வந்து எமது ஆலய முன்றலில் "கல்வாரி" கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து கணிசமான ஒரு தொகையினை ஒதுக்கித் தந்தார். தாம் ஒரு இந்துவாக இருந்தும் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு எம்மோடு இணைந்து திருப்பலியில் பங்குபற்றியதை நன்றியுணர்வோடு கூற விளைகிறேன். இதிலிருந்து இவர் ஓர் இன, மத வேறுபாடு இன்றி எல்லோர்க்கும் பணி செய்யும் சேவையாளன் என்பது வெள்ளிடை மலை. என்றும் உண்மைக்காக உயிரையும் கொடுக்கத் தயங்காத திரு. விநாயகமூர்த்தி அவர்களை மீண்டும் ஒரு தடவை வாழ்த்தி இவர், இம்மகத்தான பணிகளுடன் வாழ்வில் தொடர்ந்தும் நிலைத்திருக்கவும் இவர் போன்ற தூய உள்ளம் கொண்டவர்கள் மூலம் இறைவன் கூடிய விரைவில் எம் நாட்டிற்கு ஒரு நீதியுடன் கூடிய நிரந்தர சமாதானத்தை அருள வேண்டுமென்றும் இறையாசீர் வேண்டி நிற்கிறேன். தூய ஆவி என்றும் இவரை வழிநடத்துவாராக!

கிறிஸ்துவில் அன்பான
பங்குத்தந்தை,

அருட்திரு ஜோண் பப்ரிஸ்ற் அன்ரனி அடிகளார்,
புனித அந்தோனியார் ஆலயம்,
கரவெட்டி.

JUDGE'S CHAMBERS,
SUPREME COURT OF SRI LANKA,
COLOMBO 12.

විනිශ්චයකාර මැදිරිය,
ශ්‍රී ලංකා ශ්‍රේෂ්ඨාධිකරණය,
කොළඹ 12.

# அகவைகள் நூறிற்கும் மேல் அகலட்டும்!

அந்தந்தக் காலகட்டங்களில் இறைவன் காலத்துக்கேற்ற தலைவர்களைத் தந்திருளுகிறான். தமிழ் பேசும் மக்களின் தகாத காலகட்டத்தில், தமிழ் இளைஞர்கள் சித்திரவதைகளின் பின் சிறையில் வாடிய காலத்தில், அவர்களை அண்மித்துக் கிட்ட இருந்து அவர் தம் குறைகளை அறிந்து, நீதி மன்றங்களில் அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தூரத்துத் தலைவர்கள், சட்டைசெய்யாத சட்டத்தரணிகள் போதுமானதாக இருக்கவில்லை. கடமைகளுக்காகத் தம்மைக் கருவியாக்கித் "தான்" என்ற அகந்தை மறந்து, சிறு சிறு பதவி வகித்த சில்லறை அலுவலர்களின் சிதடு மொழிகளுக்குஞ் சிரத்தை காட்டி, பகல் இரவென்று சிரமம் பாராமல், பட்டினி கூடக் கிடந்து பலருக்குப் பற்பல நன்மைகள் செய்யக் கூடிய அனுசரணைச் சக்தியொன்று தேவைப்பட்டது.

உண்மையில் தலைவர்கள் என்று இதுகாலும் மக்கள் உயர்த்தி வைத்த அரசியல்வாதிகளும், சட்டத் தரணிகளும் இப்பேர்ப்பட்ட ஒரு சீர்கெட்ட சூழ்நிலையில் தொடர்ந்திருந்து பழையவிதத்தில் தலைமைத்துவம் அளிக்கத் தலைமை அற்றிருந்தனர் என்றே கூற வேண்டும். ஒரு புதிய தலைமைத்துவத்தைத் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் அக்காலட்டத்தில் தன் வாழ்க்கை வித்தியாசத்தால் வரைந்து கொடுத்திருந்தார் என்றால் அது மிகையாகாது.

மக்கள் அதனை மறக்காத படியாற்தான் அவரைப் பாராளுமன்றம் அனுப்பினார்கள். மக்களோடு மக்களாக மாண்புடன் வாழக் கூடியவர்களே இனி மக்கட் தலைவர்கள் என்று அழைக்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன். மக்களிடம் இருந்து பிரிந்திருந்து மற்றைய தொழில்களில் தம்மை சிறந்து விளங்கச் செய்து அப்புகழின் அடிப்படையில் அரசியற் தலைவர்கள் ஆகுங் கட்டம் இலங்கைச் சரித்திரத்தில் இப்பொழுது மலையேறி விட்டது என்றே கருதவேண்டியிருக்கிறது.

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் அதிகாரப் பத்திர அலுவலராகக் கடமையாற்றிய காலந் தொட்டே திரு. விநாயகமூர்த்தியை நான் அறிவேன். நம்பிக்கை என்ற ஏணி ஏறி நாட்டின் நலன் கருதி வாழும் நயன் மிகு அரசியல்வாதியாக இன்று அவர் மிளிர்கிறார்.

புதிய தலைமைத்துவத்திற்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்திருக்கும். திரு. விநாயகமூர்த்தி அவர்களின் அகவைகள் நூறிற்கும் மேல் அகலவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்!

நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்
நீதியரசர் தனியறை
இலங்கை உச்ச நீதிமன்றம்,
கொழும்பு 12.

# எளிமையும் நேர்மையும் மிக்க அரசியற் தலைவர்

ஐந்து சகாப்தங்களிற்கு மேலாய், சேவைகள் செய்து எம்மக்களுக்காக இன்றும் இளைஞனாய், அரசியற் பணிபுரிந்துவரும் அன்பிற்குரிய திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களை வாழ்த்தக் கிடைத்தமையை பெருமையாகக் கருதுகிறேன்.

தென்மராட்சியில் தமிழ்ப்பண்பாட்டில் ஊறிய குடும்பம் ஒன்றின் பின்னணியின் ஊறலில் வளர்ந்து, அரசசேவையில் இணைந்தும், தொடர்ந்து சட்டத்தரணியாக தன்னை நிலைப்படுத்திக் கொண்ட தனித்துவத்தினை நினைவு கூர்கையில் பெருமிதம் அடைகிறேன்.

திரு. விநாயகமூர்த்தி அவர்கள் வாழ்ந்த கிராமிய உறவு நெருக்கமான உறவுகளை சகமனிதர்களோடு ஏற்படுத்திக் கொடுத்ததோடு அல்லாமல் மனிதவாழ்வியலின் நிஜங்களை நிதர்சனப்படுத்தவும் தவறவில்லை. சமூக வாழ்வில் ஈடுபாடு கொண்ட திரு. விநாயகமூர்த்தி அவர்கள் எளிமையையும், நேர்மையையும் தன்வாழ்வியல் பாடவிதானமாக்கிக் கொண்டவர். மக்கள் சேவையே மகேசன் சேவை எனக் கொண்டு மனிதவள மேம்பாட்டிற்காக பன்முகப்பட்ட பணிகளை, குறிப்பாக அரசியலையே முதன்மைப் படுத்தியவாறாக கடந்த ஐம்பது ஆண்டுகளாக சேவையாற்றி வருகிறார்.

கடந்தகாலங்களில் வகை தொகையின்றித் தமிழ்ப்பேசும் இளைஞர்கள் அரசபடையினரால் கைதுசெய்யப்பட்டபோது, சிறுமைப்படுத்தி சித்திரைவதை செய்யப்பட்டபோது பொலிஸ் நிலையம், சிறைச்சாலை வரை சென்று நீதிமன்றங்களில் வாதாடி அவர்களின் விடுதலைக்காய், விடிவிற்காய் அயராது உழைத்தமையை அவரது சேவைகளில் மகுடம் எனலாம். இதுவொன்றே தமிழினம் அவரை என்றும் நினைவுகூரப் போதுமானது.

யாழ் பல்கலைக்கழக வளர்ச்சியில், காட்டிய அக்கறைப்பாட்டினையும் இங்கு நினைவு கூருதல் பொருந்தும். குறிப்பாக யாழ் பல்கலைக்கழகத்தின் சீர்மையான செயல்பாட்டிற்கு கடந்த காலத்தில் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் ஆற்றிய பங்கு கண்முன் மிளிர்கிறது.

நீண்ட ஆயுளும், நிறைந்த வளமும் பெற்று நீடுகாலம் பணிபுரிந்திட வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் சு.மோகனதாஸ்
துணைவேந்தர் பணிமனை,
யாழ் - பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
01.12.2003

*High Commission for the Democratic Socialist Republic of Sri Lanka*

*13 Hyde Park Gardens London W2 2LU*

Phone : 020 7262 1841 - 6
Fascimile : 020 7262 7970

My Ref.

# A Sagacious Politician

I am happy to able to send this message of felicitations on the occasion of the 70th birthday of Hon.Vinayagamoorthy.

I have had the privilege of knowing Mr.Vinayagamoorthy for several years. It is my good fortune to be able to count him as a personal friend. My friendship with him dates back several years, when initially I got to know him as a fellow member of the Bar. Since then, I have followed his outstanding progress as an Attorney at Law, a human rights activist, a sagacious politician and now at a critical juncture in our nation's affairs as a Member of Parliament.

I am particularly impressed by his efforts in promoting national reconciliation and inter-communal harmony.

I wish him good health, long life and every success.

**Faisz Musthapha PC**
*High Commissioner*

*December 9, 2003*




"The Tamil Action Committe was established in 1962 to provide services to Tamil asylum seekers and refugees requiring advice and support. The organisation has remained small. It relies heavily on the work of its founder Sinappu Maharasingham (pictured above) who is still very active within the group."
.........*Trust for London*


# TAMIL ACTION COMMITTEE

**(Established 1962)**

**A Voluntary International Human Rights Foundation to defend and protect the Human, Ecological and Political Rights of 3·9 Million Tamil speaking people in the homeland of Ilankai/Sri Lanka**

**Refugee Rehabilitation Programme**

**11 Keightley Drive, New Eltham, London SE9 2HF. Tel: 020-8859 3600 Fax: 020-8859 5105**

Chairman: Mr. S. Maharasingam, Secretary: Mr. S. Balasunderam, Ecology & Refugee Affairs: Mr. M. Mathanan, Treasurer: Ms. Alfred Shamini


# A dedicated human rights lawyer

The month of December is propitious to Tamil Action Committee for the International Human Rights Day falls on 10 December. The oppressed people of this planet celebrate this day as their day of belonging and sharing psychologically inwardly the inexhaustible pain they suffer with the rest of mankind to draw fresh energy to go on challenging the elusive oppressors everywhere.

What seems to us to be important is that when celebrating the modern birthday of human rights, we should look at our own records and we can rightly be proud to wish from our hearts our friend and brother MR.APPATHURAY VINAYAGAMOORTHY, a dedicated human rights lawyer and Member of Parliament for Jaffna District, on his 70th birthday today December 19, 2003. What a glorious coincidence!

The global observation of the international community of what is taking place in the Tamil womb of northeast is only seen conceptually superficially and not understood perceptively. The Sinhala south too is failing to understand, although having lived in each others presence for over thousands of years. The unique quality of Mr.Vinayagamoorthy is to serve all human beings irrespective of caste, race, gender, colour or religion. This is what makes him a true human being who lives in the fullness of the presence.

"If man will realise that it is unmanly to obey laws that are unjust, no man's tyranny will enslave him. This is a key to Self-Rule orHome Rule .... We shall get nothing by asking. We shall have to take what we want, and we need the requisite strength for the efforts"

- Gandhiji in his pamphlet "Hind Swaraj" or India Home Rule, 1908

It should be noted however, that citing discriminatory government policies and adopting the policy of a separate state of Ealam are legitimate exercises of the right to free speech - PROFESSOR VIRGINIA A. LEARY, STATE UNIVERSITY OF NEW YORK.

- International Commission of Jurists Report - October 1981.

"At the time when the West is awake to the evils of racialism, the racial persecution of the Tamils and denial of their human rights should not pass without protest. The British have a special obligation to protest, as these cultivated people were put at the mercy of their neighbours less then thirty years ago by the British government. They need our attention and support" - letter to The Times, September 20, 1977 from SIR JOHN FOSTER QC., DAVID ASTOR, ROBERT BIRLEY, LOUIS BLOOM-COOPER, JAMES FAWCETT, DINGLE FOOT, and MICHAEL SCOTT.

"The danger which Ceylon faces is that Ceylon is not a single unit. There are two races in Ceylon, the Sinhalese and the Tamils, a total of 6.5 million. They differ from the Sinhalese in race, religion and to a large extent in background. They are extremely capable and intelligent people. I have had a lot to do with them because they played a very large part in the development of Malaya. It was the Jaffra Tamils who came in large numbers and started the railways and government services. Where there is a racial minority in the country, the danger is that it may become a Permanent Political Minority. Ceylon's evolution on a democratic basis is bound to fail. This imposes a great responsibility. It imposes on the Sinhalese the responsibility of seeing that they grant fair and if necessary more than fair treatment to the minority not only in Political Power but also in administrative responsibility so that the minority is not inevitably driven to regard itself as a permanent political minority" .......

- Mr. Gammons, Conservative MP for Hornsey, at the House of Commons on 22nd November, 1947 during the Ceylon Independence Bill.

We should add that his holistic letters written to us on behalf of refugees spell out the danger that British imperialism had left behind the legacy of divide and rule policy for both main races to fight each other in vain for no fault of theirs under a so called corrupt parliamentary system, which is an elected dictatorship. Tamil people have cleansed themselves from this poison of bowing their heads by oppressors in the genuine Liberation struggle that is taking place now, which is not against the Sinhala people. If similar cleansing could simultaneously spontaneously take place amongst the Sinhala brethren, an enlightened period will dawn in Lanka/Illankai

Mr.Vinayagamoorthy attaches great importance to freedom of the individual conscience to see each other in the face. There-in lies his conviction that understanding intelligently will lead to co-existence and peace.

**S.Maharasingam**
CHAIRMAN
TAMIL ACTION COMMITTEE
A human rights and ecological foundation

## வாழிய! வாழிய! விநாயகமூர்த்தி!

ஐம்பத் தைந்தாண்டுகளின் முன்னர்
சம்பத் தெனவே சகலரும் வாழ்த்த
இலங்கை மணித்திரு நாடிதன் மீதினில்
சுதந்திர சூரியன் சுடர்விட் டெழுந்தனன்
இதந்தரும் உரிமைகள் எல்லா இனங்களும்
பதந்திரு வுடனே பகிர்ந்திடப் படுமென
நம்பி னோரை நயவஞ் சகத்துடன்
ஏய்த்த சிங்களப் பேரின வாதிகள்
சூழ்ச்சியைக் குலைத்துநம் ஈழத் தமிழரைக்
காத்திடத் தமிழர் காங்கிரஸ் ஜி. ஜி.
அன்னவர் மைந்தர் அரும்பெருந் தியாகி
குமார்பொன் னம்பலம் குறித்த கொள்கைகள்
வழியினைப் பற்றிய மறவர் வரிசையில்
அப்பாத்துரையரின் அரும்பெறல் மைந்தர்
விநாயகமூர்த்தி வீரம் நிறைந்தவர்
தனதரு ளுடனே தன் உழைப் பனைத்தையும்
தன்னல மின்றித் தமிழரைக் காக்க
வழங்கிட முன்வந்த வல்லாண் சிங்கம்!
அரச ஊழியமும் அதனைத் தொடர்ந்து
அவற்றின் ஊடாக எங்க ளினத்தின்
உரிமைகள், அவற்றிற் குண்டாம் தடைகள்
எல்லாம் ஒழித்திட எழுந்திட்ட தண்ணிலா!
உறுமும் புலிகளுக் குதவும் கரத்தினன்
அளித்தவர் தலைமை அதுவொன் றேஎம்
விடுதலைக் கொரேவழி எனவே கொண்டு
மாண்புடன் பணிபுரி மகிமைசால் பெரியோன்
அலைத்திடும் நோய் நொடி அவலம் யாவையும்
துச்சம் எனக்கொளும் தூய்மைசேர் உளத்தோன்!
எழுபது அகவை எய்தியும் இளைஞரின்
ஊக்கம் உறுதியை ஒருங்குதன் நெஞ்சில்
நிறுத்திக் கொண்ட நேர்மை யாளன்!
எதார்த்த வாதி! எவர்பிழை விடினும்

நெற்றிக் கண்ணால் நெருப்பைப் பாய்ச்சினும்
குற்றம் குற்றமேன் றஞ்சிடா தெடுத்துக்
காட்டி அவர்தம் களங்கம் அறுத்திட
முனைந்து நிற்கும் முதுபெரும் அறிஞர்!
எங்களுக் கெல்லாம் என்றும் இனியவர்
இன்னும் எழுபதோ டெழுபது வருடம்
உடல் நலத்துடனே உளநலம் மிக்கிடத்
தமிழின் புகழுடன் தமிழர்தம் மேன்மைகள்
அனைத்தும் காத்திட அயரா துழைக்கவும்
பணிபல புரிந்து பார்மிசைத் தன்பெயர்
கல்மிசைப் பொறித்த கவினார் நிலைபேறு
பெற்றுமே வாழிய! பெரியோர் வரிசையில்
விண்மீன் நடுவொளிர் வீறார் இரவிபோல்
வாழிய! வாழிய! வளமெலாம் அடைந்தே!

சாஹித்தியரத்தினம்
கலாநிதி. க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்
25.11.03

**"சமன் செய்து சீர்தூக்குங் கோல் போலமைந் தொருபால்
கோடாமை சான்றோர் கணி"**

குறள் 118

**P. Chandrasekaran, M.P.**
Minister of Community Development &
Deputy Minister of Irrigation & Water Managen.ent

04.12.2003

# நானறிந்த சட்டத்தரணி – ஒரு நாடறிந்த சட்டத்தரணி

சட்டத்தரணிகள் பணம் பிடுங்கும் இயந்திரம் என்ற கருத்து பரவலாக சொல்லப்படுவதுண்டு. ஆனால் வருமானத்தை எதிர்பார்க்காத தொண்டனாக இந்த சட்டத்தரணி அந்தஸ்த்தை பயன்படுத்தி காட்டியவர் கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள்.

பயங்கரவாதத் தடை சட்டமும் அவசரகால விதிகளும் சிறுபான்மைத் தமிழ் மக்களையும், குறிப்பாக இளைஞர்களையும் ஈவிரக்கமோ மனிதாபிமானமோ இல்லாமல் சீரழித்த போது அவர்களைக் காப்பதற்காக சட்ட வாய்ப்புகளை முடிந்தளவு பயன்படுத்த முயற்சித்த பெருமைக்குரியவராக திரு. விநாயகமூர்த்தி அவர்களை நான் பார்க்கிறேன்.

பெயரளவில் நீண்ட காலமாக இவரைத் தெரிந்திருந்தாலும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் 3 வருடம் தடுப்புக்காவலில் நான் இருந்தபோதுதான் இவருடைய நேரடித் தொடர்பு எனக்கு ஏற்பட்டது.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இரக்க சிந்தனையோடு சகல கைதிகளுக்கும் உதவியதை நான் நேரடியாக கண்டிருக்கின்றேன். அநாதரவாகவும் நிர்கதியாகவும் கைதாகி இருந்த மலையக இளைஞர்களின் விடுதலைக்காக இவர் ஆற்றிய பங்கினை எவரும் எப்போதும் மறந்துவிட முடியாது.

தற்போது 70 வயதை பூர்த்தி செய்யும் இவர் தெளிவான கொள்கைகள் கொண்ட ஓர் அரசியல்வாதியாகவும், தமிழ் இளைஞர்களிற்கு நண்பராகவும், இரட்சகராகவும் உயர்ந்து நிற்கிறார். சட்டத்துறையில் இவரது பணி மேலும் சிறக்கவும் பல்லாண்டு காலம் அவர் வளமுடன் வாழவும் இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

பெ. சந்திரசேகரன், பா. உ.,
சமூக அபிவிருத்தி அமைச்சர்,
நீர்பாசன நீர்முகாமைத்துவ பிரதியமைச்சர்.

# விளையின் பயிரின் நன்முளையாக விளங்கிய விநாயகர்

2000ம் ஆண்டின் முற்பகுதியில் நான் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தேன். சிறைச்சாலை முன்றலில் இரு ஊன்று கோல்களின் உதவியுடன் மிகவும் களைப்புற்ற நிலையில் வந்து கொண்டிருந்த நபரை அவதானித்த நான் அவரை நாடிச்சென்று, இப்படியான கஷ்டநிலையில் எப்படி இவ்விடம் வந்தீர்கள்? என்று கேட்ட பொழுது தடுப்புக்காவலிலுள்ள தனது கட்சிக்காரர்களைப் பார்ப்பதற்கும், அவர்களிடமிருந்து வழக்கிற்குத்தேவையான சில தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குமாக வந்ததாகத் தெரிவித்தார். ஊன்று கோல்களின் உதவியின்றி அவரால் நிற்கவே முடியாதநிலை, இந்நிலையையிட்டு நான் கவலைப்படுவதையுணர்ந்த அவர் தான் படும் கஷ்டங்களிலும் பார்க்க சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள் படும் கஷ்டங்கள் மிக மோசமானதெனக் கூறிய அவர், வேறு யாருமல்ல, எமது சகோதரர் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களே ஆவார்.

இவர் தனது இளம் பராயத்தில் தனது தாயாரையிழந்த நிலையில் தகப்பனாரின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். இவர் அமைதியும் நிதானமுங் கொண்ட விளையும் பயிரின் நன் முளையாக ஊர் மக்களால், உறவினர்களால் இனங்காணப்பட்டிருந்தார். "அடக்கம் அமரருள் உய்க்கும்..." என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கமைய இவர் தனது பள்ளிப் பருவத்திலேயே அடக்கம், பணிவு உள்ள ஒருவராகத் திகழ்ந்தார்.

இவர் 1953ம் ஆண்டு அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்து, நீதியமைச்சின் நிர்வாகத்தின் கீழ் பல நிறுவனங்களில் பணிபுரிந்தார். நீதித்துறை சேவை இவரின் எதிர்கால வாழ்க்கைக்கு நல்லதொரு பாதையையமைத்துக் கொடுப்பதற்கு மூலகாரணமாக அமைந்ததென்றால் அது மிகையாகாது. காரணம் சட்டத்துறையில் அவருக்குக் கிடைக்கப்பெற்ற அறிவும் அனுபவமும் பின்னர் அவர் ஒரு வழக்கறிஞராக வரும் வாய்ப்பையேற்படுத்திக் கொடுத்தன. அதன் பயனாக 1985ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ந் திகதி இலங்கை உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாகச் சத்திய பிரமாணம் செய்து கொண்டார். இவர் அரச சேவையிலிருந்த காலத்தில், இவரது சேவைத்திறனைப் பாராட்டி பல உயரதிகாரிகள், நீதிபதிகள் இவருக்கு நற்சான்றிதழ்களை வழங்கியுள்ளனர். அரசாங்க எழுதுவினைஞர் சேவைத்தரத்திலுள்ள ஊழியர்களது நலன்கருதி தொழிற்சங்க நடவடிக்கைகளின் மூலம் அவர்களுக்குப் பல நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தவர்.

இவரது முன்னேற்றத்திற்கு தன்னை அர்ப்பணித்து அளப்பரிய சேவைகளை மேற்கொண்டு, தனது உடல் சௌகரியத்தையும் கவனியாது அயராது உழைத்து இல்லறத்தில் அன்பும் அமைதியும் நிலவ வழிவகுத்து அமரத்துவமடைந்த இவரது துணைவியார் தையல் நாயகி அம்மையாரை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூருதல் சாலப்பொருத்தமுடையதென நான் நினைக்கின்றேன்.

இவர் கடந்த பதினெட்டு வருடங்களுக்கு மேலாக சட்டத்தரணியாகத் பணி புரிந்து வருகின்றார். இவர் பெரும்பாலும் தமிழ் இளைஞர்களுக்குப் பாதிப்பைக் கொடுத்த பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால விதிகள் போன்றவற்றிலுள்ள சில முக்கிய சரத்துக்களை மையமாக வைத்து தனது வாதத்தின் மூலம் அவற்றின் சட்ட வலுவின்மையை நிருபித்து பல வழக்குகளிலிருந்து இளைஞர்களுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்தவர். அதுமட்டுமல்ல, மேற்குறிப்பிட்ட சட்டங்களின் அனுசரணையுடன் செயற்பட்ட சில அதிகாரிகளினால் இளைஞர்களுக்கேற்பட்ட உடல், உளரீதியான பாதிப்பிற்கு அடிப்படை மனித உரிமை மீறல் சட்டத்தின் கீழ் நிவாரணமும் பெற்றுக்கொடுத்தவர். சில சந்தர்ப்பங்களில் மிகவும் சட்டச்சிக்கல்கள் நிறைந்த வழக்குகளில் கூட இவர் மேற்கொண்ட ஊக்கமும், சிரத்தையும், மனிவுறுதியும்

இவரது கட்சிக்காரருக்கு விமோசனம் கிடைக்கவழிவகுத்தன. சில வழக்குகளில் இவரது முயற்சி வெற்றியளிக்கத் தவறியிருக்கலாம். அதற்கு சட்டத்தரணி மட்டும் பொறுப்பல்ல. எந்தவொரு வழக்கிலும் கட்சிக்காரால் அளிக்கப்படும் வாக்குமூலத்திலும், சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களிலுமே தான் அவ்வழக்கின் வெற்றி, தோல்வி தங்கியிருக்கின்றது. இதனையுணராத சிலர் இவர் மீது கண்டனங்களையும், தேவையற்ற விமர்சனங்களையும் மேற்கொண்டிருக்கின்றார்கள். இதனையிட்டு திரு. விநாயகமூர்த்தி அவர்கள் கவலைப்பட்டதில்லை, அதற்குப் பதிலாகச் சகிப்புத்தன்மையை மேற்கொண்டார்.

இவர் 1947ம் ஆண்டிலிருந்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளராக இருந்து பின்னர் உறுப்பினராகச் சேர்ந்து, நாளடைவில் கட்சிக்காக வழங்கிய சேவை மூலம் கட்சித்தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக, கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக உயர்வு பெற்று இன்று தமிழ் மக்களுடைய அரசியலில் முக்கிய இடத்தை வகித்து வருகின்றார். குறிப்பிட்ட காலக்கட்டத்தில் கட்சி செயற்படாத நிலையிலிருந்த போது கட்சியின் பெயரைக் காப்பாற்றி வந்த விரல்விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்களில் இவரும் ஒருவராவார். கட்சியின் மூத்த தலைவர்களுக்கு என்றும் விசுவாசமாகவிருந்தவர். மாற்றுக் கட்சிக்காரருடன் கொள்கை வேறுபாடிருந்த போதிலும் இவர் அவர்களுடன் ஒருவித புரிந்துணர்வு கொள்கையுடன் செயற்பட்டு வருகின்றார். இதனை எனது சொந்த அனுபவத்திலிருந்து புரிந்து கொள்ளமுடிகின்றது.

இவர் 2000ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டு யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பாராளுமன்றத்திலும், வெளியிலும் மேற்கொண்ட பணியை நன்றி மனப்பான்மையுடன் ஏற்றுக் கொண்ட தமிழ் மக்கள் பின்னர் 2001ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தமிழர் கூட்டமைப்பின் அபேட்சகராகப் போட்டியிட்ட இவரைத் தங்களது உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர். இவர் கொழும்பை வதிவிடமாகக் கொண்டிருந்த போதிலும், தனது மாவட்டத்திற்கு மட்டுமல்ல வடகிழக்கிலுள்ள சகல மாவட்டங்களுக்கும் சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதில் அயராது உழைத்து வருகின்றார். தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது மக்களுக்குச் சேவை செய்வதே தனது முக்கிய நோக்கமென்பதை செயலில் காட்டி வருகின்றார்.

'சுயநலன் அற்றதே நல்லொழுக்கம்' என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கமைய இவர் தனது வாழ்க்கைக்கான கொள்கையை வகுத்துக் கொண்டவர். இவர் தனது சிந்தனையில் சிவமயத்தை சேமமுறக்கொண்டு இறைபக்தி உள்ளவராக, நல்லவராக, வல்லவராக வாழ்ந்திட பழகிக் கொண்டார். 1965ம் ஆண்டு தொடக்கம் கொக்குவிலில் இவரது வீட்டிற்கு அண்மையிலுள்ள மாத்தனை முருகன் ஆலயத்தின் முன்னேற்றத்திற்கும், சமய வளர்ச்சிக்கும் தனது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். இதன் பலனாக, இரு தடவைகள் சென்னை அப்பலோ மருத்துவமனையில் பல லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவைச் சிகிச்சைகள் திருப்திகரமாக அமைந்துள்ளன. அதே போன்று முழங்காலில் ஏற்பட்ட நோய்க்கும் மூன்று தடவைகள் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

திரு. விநாயகமூர்த்தி அவர்கள் வாழ்வில் வளமும், மேன்மையும் பெற்று பெருவாழ்வு வாழந்திடவும் ஏற்கனவே மேற்கொண்டுவரும் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் மாத்தனை முருகப்பெருமானின் அருள் கிடைக்கப்பெறுக.

இவரது பணியைப் போற்றி இவரது எழுபதாவது பிறந்த தினத்தில் விழா எடுப்பதற்கும், மலர் வெளியிடுவதற்கும் ஒழுங்குகளை மேற்கொள்ளும் பெரியார்களது பணி போற்றுதற்குரியது.

**சண்முகம் பெரியதம்பி**
(சுழிபுரம்)
*Retired Deputy Registrar,*
*Supreme Court of Sri Lanka.*

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

(ஸ்தாபிதம் : 29-8-44)

ALL CEYLON TAMIL CONGRESS

(Founded 29-8-44)

From the Desk of:
Nalliah Kumaraguruparan PhD (Fin Mgt)
CFC (Charter USA), AICIA, IPFM(Fellow), MIMgt(SL)
Senior Vice President
Tel : +94 (0)1-553310,075-335261
Fax: +94 (0)1- 553310,596013
E-Mail: Kumargpn@sol.lk

"காங்கிரஸ் இல்லம்"
120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

R 2/8 Anderson Flats
Colombo - 05


# மூன்று தசாப்தங்களின் பின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் பாராளுமன்ற உறுப்பினராகி முத்திரை பதித்த எம் தலைவர்

எமது அன்புக்கும் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய எமது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விநாயகமூர்த்தி அவர்கள் அகவை எழுபது பூர்த்தி அடைந்துவிட்டாரே என்பதில் எனக்குப் பூரிப்பு. காரணங்கள் பல, அவையும் பல பரிமாணம் மிக்கவை. அண்ணல் விநாயகமூர்த்தி அவர்கள் இன்று கௌரவ பாராளுமன்ற உறுப்பினரானாலும் அவரை என்றும் போல் 'அண்ணை' என்றழைப்பதில்தான் ஒரு திருப்தி. அது எமது உரிமையின் ஒரு கோலம். இருபத்தைந்தாண்டுகள் எமது தமிழ்க் காங்கிரஸ் பாசறையின் உடன் பிறப்பாக இன்றிருக்கின்ற தமிழ்க்காங்கிரஸ் காரருக்குள் எமது பிணைப்பு பலமானது, உரிமை கொண்டது. இந்த உறவின் அடிப்படை தமிழ்க் காங்கிரஸ் ஆயினும் பின்னர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் எனும் எமது தலைவனின் வழி நடத்தலுக்கும் அவரது அரசியற் தலைமைக்கும் வரைவிலக்கணம் கூறவல்ல இளவல்களாக இணைந்து கொண்டோம். 1985 க்கப்பால் திரு. விநாயகமூர்த்தி அவர்கள், அமரர் மாமனிதர் குமாரின் சட்ட இளவலாகவும் இணைந்து பணிகள் பல ஆற்றினார்.

ஆண்டுகள் பல தசாப்தங்கள் முன்னே பின்னோக்கிப் பார்ப்போமாயின் "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற எமது தமிழ்த் தேசிய வாதத்தின் தந்தை ஜீ.ஜீ. அவர்கள் தமிழினத்தை தட்டி எழுப்பி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஊடாக தமிழினத்திற்கு தலைமை தர, கால் கோள் கொண்ட காலை ஒரு தொண்டனாக காங்கிரஸின் புகழை ஜீ.ஜீ.யின் புகழை உரத்துக்கூறியவர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள். அந்தப்பாசறையின் நிறுவனகால ஸ்தாபக உறுப்பினராகவும், உறுப்பினராகவும், பருத்தித்துறை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் கூட்டுத்தொகுதியின் சட்டசபை உறுப்பினராக விளங்கிய வழக்குரைஞர் தம்பையா முதலியார் சபாரத்தினம் எனது பேரனார். இவ்விதமாக எனக்கும் காங்கிரஸிற்கும் ஓர் உறவு ஊடலும் கூட. எனது தந்தையின் மண் கைதடிக்கும் அண்ணல் விநாயகமூர்த்திக்கும் ஓர் உறவு, அவரது பிறந்த மண் சரசாலை ஆயினும் கைதடியில் அண்ணல் விநாயகமூர்த்தி அவர்களுக்கு உறவுக்காரர்கள் அதிகம் இவ்விதமாக பின்னிப் பிணைந்து, இன்றைய காங்கிரஸ் காரருக்குள் எனக்கும் எமது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விநாயகமூர்த்தி அவர்களுக்கும் ஒரு வித நட்புறவு முன்னிலை பெறுகின்றது.

. எனது திருமணத்தின் போது மறைந்த தலைவர்கள் மாமனிதர் குமார் பொன்னம்பலம், மோத்திலால் நேரு என்பாருடன் இன்று எம்முடன் இருக்கும் விநாயகமூர்த்தி அண்ணனும் இருமருங்கும் முற்போந்த இரு தலைவர்களின் துணைவியர் யோகி அக்கா, நீலா அக்காவும் இருந்த காட்சி தான் என்னை ஒரு தமிழ்க்காங்கிரஸ் குடும்பத்தில் ஒருவனாக புழங்காகிதம் அடையச் செய்தது அன்று அந்த சரஸ்வதி மண்டபத்தில் 1988இல்.

திரு. விநாயகமூர்த்தி அவர்கள் தமிழ்க் காங்கிரஸை ஆதரித்த அரசாங்க எழுதுவினைஞர் காங்கிரஸின் தலைவராக பன்னெடுங்காலம் திகழ்ந்தவர். நேர்மையான கட்சித் தொண்டர், நேர்மையான அரசாங்க உத்தியோகத்தர் இன்றும் பலர் அவரை நீதி மன்ற முதலியாராக அந்நாள் நினைவுகளை மீட்பதுண்டு. 1979ம் ஆண்டு நாங்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக்கிளைக்கு புது இரத்தம் பாய்ச்சினோம் அப்பொழுது இம்றடேஷன் பொன்னம்பலம் எனப்படும் அப்புக்காத்து சரவணமுத்து அவர்கள் தலைவராக இருந்தார்கள். இவர் அமரர் சட்டமேதை ஜீ. ஜீ. யின் ஜுனியராகத் திகழ்ந்தவர். அடுத்து உபதலைவர் வரிசையில் வி. சி. மோத்திலால் நேரு மற்றும் ஈ. டபிள்யூ. தேவராஜா ஆகியோருடன் திரு விநாயகமூர்த்தி அவர்களும் விளங்கினார்கள். நான் துணைச் செயலாளராக இருந்தேன். ஒரு பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தில் பயிலுனர், செயலாளர் கே.ரி.எம். விஜயகுமார் அப்பொழுதுதான் எழுதுவினைஞர் சேவையிலிருந்து அரைக்கணக்காளர் ஆகியிருந்தார். எங்கள் ஜீ. ஜீ. யின் தனிப்பட்ட செயலாளராக பின்னாளில் இருந்தவர் திரு. மயில்வாகனம் மற்றயவர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள். அவர் அப்பொழுது அரச நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர். ஜீ. ஜீ. மீது அவருக்கு இருந்த அபிமானம் நாங்கள் அவரது அலுவலகத்திற்கே போய்விடுவோம் ஐம்பது ரூபா சேர்ப்பதற்கு குறைநிறையிருப்பின் மறைந்த அம்மையார் திருமதி பொன்னம்பலம் அவர்கள் தருவார்கள். இதை நான் இங்கு அலட்டிக் கொள்வது பலருக்கு அலட்டலானாலும் எமக்கு இனிமையான நினைவுகள். இவை ஜீ. ஜீ. மீதும் காங்கிரஸ் மீதுமான எமது அன்பின் பரிமாணங்கள்.

நான் 1981ம் ஆண்டு முல்லைத்தீவில் முதன்முதலாக எனது 23ஆவது வயதில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் தமிழினத்திற்கு தீர்வாகாது என தேர்தலில் நின்றேன். இக்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களென ஊரெல்லாம் உளன்று வந்தோம். நானும் விநாயகமூர்த்தி அண்ணலும் எமது தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் வெற்றிக்காக 1989 முதல் இப்பார் வந்த தேர்தல்களிலும் போட்டியிட்டோம்.

கௌரவ விநாயகமூர்த்தி அவர்கள் தமிழ்க் காங்கிரஸ் பாசறையில் வளர்ந்தாருக்கு இருக்கும் புடம்போட்ட துணிவு கொண்டவராக விளங்குகின்றார். மேலும் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி கொண்ட பின்னர் அவரிடம் இருக்கும் துணிவு "தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என அதீதமாய் அதிகரித்து விளங்குகின்றது என்று சொன்னால் அது மிகையல்ல.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசர கால விதிகளிற்கு எதிரான வழக்குகளில் அன்னாளில் எவரும் ஆஜராக பயந்திருந்த வேளை என் தலைவன் மாமனிதரின் குமார் பொன்னம்பலம் அவர்கள் சங்காரம் நிதம் என்று சங்காய் முழங்கிய வேளை துணைநின்ற சட்டதரணிகளில் தளபதியாய் திகழ்ந்தவர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் அதுமட்டுமல்ல ஆட்கொணர்வு மனுமுதல் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகளில் கூடுதலான வழக்குகளைத்தாக்கல் செய்து ஒரு சாதனையாளரான வழக்கறிஞராகத் திகழுந்தார்

என்றால் மிகையாகாது என்பது மட்டுமல்ல அதுவே உண்மையுமாகும். எனக்குத் தெரியும் ஒரு உதவியாளருமின்றி அதிகாலை எழுந்து வழக்கு வேலைகளைத் தயார் செய்து முச்சக்கரவண்டியிலேயே சென்று பல சாதனைகளை செய்தவர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள். கிழக்கு மாகாணத்திலிருந்து வந்த ஏழைகளின் உறவினர்கள் தமது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் யுவதிகளின் வழக்குகளுக்காக விநாயகமூர்த்தி அண்ணை அவர்களின் வீட்டில் இரவிரவாகக் காவலிருப்பார்கள் அந்நாளில் அவர்களுக் கெல்லாம் ஆறுதல் கூறி பணமேதுமின்றி அல்லது அவர்கள் கொடுக்கும் அன்புக் காணிக்கையை ஏற்று வழக்குச் செய்த மனிதாபிமானம் மிக்க ஒருவர் என்பதை நான் சொல்லியே ஆகவேண்டும்.

அமரர் சட்டமேதை ஜீ. ஜீ. யின் காலம் முதல் அவரது கொள்கைளில் நம்பிக்கை கொண்ட திரு விநாயகமூாத்தி அவர்களும், நானுமே ஜீ. ஜீ. யின் மறைவின் பின்னர் தவறாது வருடந்தோறும் ஜீ.ஜீ. அவர்களுக்கு நினைவுக்கட்டுரை வரைந்து வருபவர்கள். அது மட்டுமல்ல எமது மறைந்த பெரும் தலைவருக்கு எதிராக தமிழரசுக்கட்சியினர், சமஷ்டிக்கட்சியினர் சுமத்திய வாக்குரிமைச் சட்டங்கள் தொடர்பான கட்டுக்கதைகளுக்கு எனது பள்ளிக்காலம் முதல் யான் அறிய பதிலிறுத்து வரும் ஒருவர் திரு. விநாயகமூர்த்தி அவர்களே சமபலக்கோரிக்கையை நியாயப்படுத்தி வருபவர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள். 1979 முதல் நானும் அவர்வழியிலேயே இவற்றுக்கெல்லாம் பதிலிறுக்கும் பணியில் எமது தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களுடன் இணைந்து கொண்டேன்.

அந்த வகையில் அவரது மறைவின் பின் தலைவராக கௌரவ விநாயகமூர்த்தி அவர்களும் பொதுச் செயலாளராக நானும் தெரிவு செய்யப்பட்டதில் எனக்கேதும் ஆச்சரியம் இருக்கவில்லை. இருந்தும் பின்னாளில் மாமனிதரின் தியாகத்திற்கு தலைவராக திரு.விநாயகமூர்த்தியும் பொதுச்செயலாளராக நானும் உயிர்கொடுத்தோம் இந்த வெற்றியின் பின்னர் திரு.விநாயகமூர்த்தி அவர்கள் தனித்து போட்டியிட்டபோது ஒரு வேட்பாளராக நிற்கத் திராணி அற்றவர்கள் கூட இன்று மரம்பழுத்துள்ள வேளையில் ஆக்கிரமிக்க முயல்வது ஏதும் ஆச்சரியத்திற்குரிய தொன்றல்ல.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் 2000ம் ஆண்டு ஜனவரி 5ம் திகதி படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாம் இருவரும் முன்னின்று எம்தலைவனின் பாசறை யாம் தமிழ்க் காங்கிரஸ் மீண்டும் வீரியமுடன் செயற்படச் செய்தோம். எமக்கெதிராகப் பலர் செயற்பட்டனர். கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஆயினும் தமிழர் தம் அவலங்களை உலகறியச் செய்வதில் முன்னின்றோம். அமரர் குமாரின் மரணத்திற்கு நியாயம் கேட்டோம். மாமனிதரின் குடும்பத்திலிருந்து ஒருவரேனும் தமிழ்க்காங்கிரஸிற்கு தலைமை தாங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருந்தது. ஆயினும் அக்கால கட்டத்தின் ஆபத்தினை கருத்திற் கொண்டு அவரது குடும்பத்தினர் நேரடி அரசியலிற்கு வராதநேரம். அன்றைய சந்திரிக்கா அரசின் மனித உரிமை மீறல்களின், அரச பயங்கர வாதத்திற்குகெதிராக நாம் இருவரும் ஏனைய தமிழ்கட்சிகளுடனிணைந்து முன்னின்று குரல் கொடுத்தோம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம், மற்றும் வழக்குரைஞராகவும் அவரது தளபதியாகவும் விளங்கிய மோத்திலால் நேருவுடன் தொடர்ந்தும் பல சர்வகட்சி மாநாடுகளில் கலந்து கொண்டவர்கள் நானும் திரு.விநாயகமூர்த்தி அவர்களுமே. இதில் முக்கியமான விடயம் என்னவெனில் எமது மாமனிதரின் மறைவின் பின் சந்திரிக்கா அவர்கள் ஒரு சர்வகட்சி மாநாட்டிற்கு அழைத்திருந்தார். அதில் நானும் எமது தலைவர் திரு.விநாயகமூர்த்தி அவர்களும் கலந்து கொண்டோம் அப்பொழுதே திரு.விநாயகமூர்த்தி

அவர்கள் எழுந்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசுவதன் மூலம்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் என எடுத்துரைத்தார். அதுகண்டு சந்திரிக்கா அவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஏதும் அற்புதமாய், தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர முடியுமானால்... என்றவர் புதிய தமிழ்க் காங்கிரஸ் தலைமையின் வீரியத்தையும் குறிப்பிட்டார். இன்றைய எமது கருத்துடன் இன்றைய நிஜத்தினை நான் எண்ணிப்பார்க்கின்றேன். திரு.விநாயகமூர்த்தி அவர்கள் தலைவராகவும் நான் பொதுச்செயலாளராகவும் மாமனிதர் விதைத்துச் சென்ற துணிவுடன் செயற்பட்டோம். எமது அன்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் கொள்கைத்தளமிட்டோம். மாமனிதர் குமார் வழிநின்றோம். 1970க்கிற்குப் பின்னர், மாமனிதரின் 23 வருடகால அரசியலிற்குப்பின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பெயர் சொல்ல நாம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினராய் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் தெரிவானார்கள். அன்று 2000ம் ஆண்டுத்தேர்தலில் அவர் பெற்ற வெற்றிதான் இன்று தமிழ்க காங்கிரஸ் இத்தனை சக்தியாக விளங்குகிறது.

வாழ்க நீர் எம்மான் பல்லாண்டு இப்புவியில் தமிழனம் நிகரோங்க!

சிரேஷ்ட உபதலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

***"பாடு பட்டு உழைப்பவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தம் ஐயா"***

- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை -

# Hon. A. Vinayagamoorthy
# The Bright Star of the Tamil Community

Late Hon.G.G.Ponnambalam had by the Grace of God moulded Mr.Appathuray Vinayagamoorthy right from his student days to be the bright star of the All Ceylon Tamil Congress. It was the will of God that Appathuray Vinayagamoorthy should be bestowed with fortitude to fight for the rights of the Tamil speaking people even at the age of Seventy. Mr.Appathuray Vinayagamoorthy had the blessings of Late Hon.G.G.Ponnambalam for his policy to have equal representation in the Parliament for the minorities, namely the Tamils, Muslims, Moors, Estate Tamils, Burghers and Malays with Sinhala speaking majority.

The British Empire before it could begin with its non-existence created constitutions in the Asiatic countries to bring dissensions among the several communities who lived in harmony under the British Rule as children of one parent.

The grant of Independence to India brought Pakistan into existenence to continue strife with no end to it up to date.

A breakaway of some members of the U.N.P. led to a group to form the Sri Lanka Freedom Party who took the burden for the introduction of Sinhala as the official Language. This is the first cut to split Sri Lanka. The advocacy of a Federal Constitution by the Kandyan Sinhalese before the Donoughmore Constitution was not felt them but today it has become a must. Hon.M.P. for Jaffna district A.Vinayagamoorthy strongly follows the foot steps of his leader in the policy of balanced representation in the Legislature. This will become the axle to the working of the Federal set up with three Federal States as advocated by the Kandyan Sinhalese, namely Maritime Kandyan and North and East Federal States.

Hon M.P. A.Vinayagamoorthy has the strength to fight for the Tamil Ealam or Tamilistan as in the case of Pakistan the Sinhala politicians do not desire to work for unity by realizing that the Tamils should be made equal with Sinhalese in all respects. A THINK TANK is Mr.Vinayagamoorthy to bring about unity among the races in Sri Lanka. This could be seen by his speech in Parliament. He has for the first time in Parliament indicated that Court of Appeal should sit in provinces to stop the translation of case records in Tamil to Sinhala in order to clear all indisposed Appeals. This has been accepted by professor G.L.Peiris, Hon. Minister. He also advocates that the Sinhala and Tamil Traders big or small to have their name boards exhibition in their business premises in all three languages instead Sinhala or Tamil only. A real step it is, for a self realisation that all the races in Sri Lanka should live in unity without being victims of rabid communalism.

Hon.M.P. A.Vinayagamoorthy, though he has reached the age of Seven decades, he is brave and courageous to fight for the rights of the Tamils in the same force as his Leader Hon.G.G.Ponampalam. He feared no death to bring to the attention of Sri Lanka the basis on which a machinery was set up to murder the Learder's son Kumar Ponnambalam. He withstood the threats of death in the first election where he found success to raise the banner of the All Ceylon Tamil Congress and to instill in the minds of the Majority Sinhala people to live in peace with the minorities on a balanced representation in the Federated States three in number for an economic viability.

May Vinayagamoorthy prosper well.
May the Tamil Community continue to receive his unstinted services towards its betterment.
May God bless him with good health and longer life.

**R.Rudra B.Sc. (Lond.)**
*Advocate,*
*Attorney-at-Law.*

"All persons are equal before the law"

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

# துணிவு மிக்க வழக்கறிஞர்

**கௌ**ரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் டிசம்பர் 19, 2003 அன்று தனது எழுபதாவது வயதைப் பூர்த்தி செய்கின்றார் என்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறேன்.

அரச ஊழியராக, 32 வருடங்கள் பணியாற்றிய அவர் ஊழியர் நம்பிக்கை நிதியத் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பதவியாற்றினார். அங்கு பணியாற்றிக் கொண்டே, கொழும்பு பல்கலைக்கழகத்தின் அனுமதிபெற்று சட்டத்துறைப் பட்டதாரியாகி, பின்னர் சட்டத்தரணியாக கடந்த 20 வருடங்களாகப் பணியாற்றி வருகின்றார். இக்காலத்தில், எனது காலஞ்சென்ற தந்தையார் குமார் பொன்னம்பலத்துடன் இணைந்து வருடக்கணக்காக சிறைகளில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வாடிய நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்.

திரு. விநாயகமூர்த்தி, எனது பாட்டனார், காலஞ்சென்ற ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் காலத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் இளம் தொண்டனாகச் சேர்ந்து செயல் படத்தொடங்கியவர். இவர் கட்சியின் மேல் கொண்ட விசுவாசம், நம்பிக்கை காரணமாக, மத்திய குழு உறுப்பினராகி, கட்சிக்காக உழைத்து வந்தவர்.

எனது தந்தையார் அகால மரணமடைந்ததன் பின்னர், கட்சியின் தலைமைப் பதவியைப் பாரமேற்று திறம்பட நடாத்தி வருகின்றார். அத்துடன், 2000ம் ஆண்டு, 2001ம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களில் யாழ் மாவட்டத்தில் எமது கட்சியின்சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் பாராளுமன்றத்தில் தனது மனதுக்குப் பட்டதை அச்சமின்றி, வெளிப்படுத்தும் உரைகள் பலராலும் மெச்சப்படுபவை.

அவர் குறிப்பாக, எமது குடும்பத்துடன் 50 ஆண்டுகளுக்கு மேலாக, மூன்று பரம்பரையாக நெருங்கிப் பழகி வந்துள்ளார்.

70வது பிறந்த நாளைக் கொண்டாடும் விநாயகமூர்த்தி மாமா அவரது மக்கள் சேவையைத் தொடர வேண்டும் என எனது குடும்பத்தின் சார்பில் மனமார வாழ்த்துகின்றேன்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் மாவட்டம்

# மாமனிதரின் தளபதி....

பேரின வாதத்துக்கு எதிராகப், பேரிகையாய் முழங்கிய தமிழ்த் தலைவன் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் தளபதியாய் நின்று பணியாற்றி அவர்களது மறைவிற்குப் பின்னும், மெய்ப்படுகாய்யெல்லாம் பொய்பட, உணர்வின் சிகரமாய் இன்னுயிராம் தமிழின் தன்மானம் காக்க உறக்கமின்றி உயிர்ப்புடன் உழைத்துவரும் உத்தமரே. உங்களுக்கு தமிழ் அன்பர்கள் எடுக்கும் விழா மிகப் பொருத்தமானதே.

கிராமியச் சூழலில் பிறந்து, மக்கள் மனங்களுடன் சங்கமித்து, சாமானியனாய், எளிமையும், செம்மையும் கோலமாய் சத்தியத்திற்கும், நிலைக்களனாய் அரசியற் பணிபுரிந்துவரும் ஒப்புயர்வற்ற தலைவா! தமிழினம் உங்களை என்றும் வாழ்த்தும், உங்கள் சேவையைப் பாராட்டும்.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்களுடனும், அவர் தம்மைந்தன் குமாருடனும் தொடர்ந்து கஜேந்திரகுமாருடனும் ஒரே பாசறையில் இருந்தவாராக 50 ஆண்டுகள் தாங்கள் புரிந்துவரும் அரசியற்பணி, பதவி மோகங்களுக்கும், சுயவிருப்புக்களுக்கும் அப்பாற்பட்டு கட்டுக்கோப்புடன் மக்கள் நலனை முன்னிறுத்தியதாகும். பண்பட்ட இந்த அரசியல் நாகரிகம் எதிர்கால சந்ததியினருக்கு தாங்கள் வழங்கிய முன்னுதாரணமாகும்.

அமரர் குமாரின் அகால மரணத்தின் பின் தமிழ் காங்கிரஸ் எதிர்கொண்ட வெற்றிடத்தை, சவால்களைச் சரிசெய்து, இரண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுக் காங்கிரஸின் இருப்பினை நிலைப்படுத்திய தங்களின் மதிநுட்பத்தை, செயலாற்றலை காங்கிரஸின் வரலாறு பொன்னாலான எழுத்துக்களால் பொறிக்கும்.

வாழ்வியல் பயணத்தின், நீண்ட காலங்களை நீங்கள் பொலிஸ் நிலையம், இராணுவமுகாம், நீதிமன்றம், சிறைச்சாலை எனப் பயணிப்பதிலேயே செலவு செய்திருக்கிறீர்கள். அங்கு தாங்கள் நிகழ்த்திய போர், ஆக்கிரமிப்புப் படைகளால் வகை, தொகையின்றி கைது செய்யப்பட்ட அப்பாவிகளுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் விமோசனமளித்தது. ஆதர்ச புருசனாக விளங்கினீர்கள். அவர்கள் சார்பாக வாதாடினீர்கள். அவர்கள் வளத்திற்கும், வாழ்விற்குமாக இன்னும் உதவியவாறேயுள்ளீர்கள். இதுவொன்றே தங்களை நினைத்திட, தங்கள் புகழ் நிலைத்திடப் போதுமானதாகும்.

சமகால அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களை மேன்மேலும் வலுப்படுத்த பாராளுமன்றத்தின் உள்ளும், வெளியும் சர்வதேச அரங்கிலும் தாங்கள் நிகழ்த்தும் உரைகள், தங்களின் அரசியல் முதிர்ச்சியையும், தமிழ் காங்கிரஸின் தன்னின மானத்தையும் எடுத்தக்காட்டுகின்றன.

இன்றுபோல் என்றும் தங்களது அரசியல்பணி தொடர எல்லாம்வல்ல இறைவன் நீண்ட ஆயுளையும் நிறைந்த வளத்தையும் தங்களுக்கு நல்குவாராக.

க. சிவானந்த மூர்த்தி

க. சிவானந்த மூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*S. Ramalingam* J.P. (All Island)
*Retired Asst. Govt. Agent*
**NOTARY PUBLIC**
*Sworn Translator – Sinhala, Tamil & English*

Tel : 2500657
e-mail: yaso@e-mnet.com

***T 1/1, Anderson Flats***
***Colombo 5 (Sri Lanka)***

# நூறாண்டு வாழ்க!

*கண்ணியந் திறமையாற்றல் கனிவுடன் பேசுமன்பன்*
*திண்ணிய லட்சியத்தே திரிபறு உறுதிகொண்டோன்*
*புண்ணிய மாகவேதன் உயர்தொழி லாற்றப்பல்லோர்*
*எண்ணியே புகழுமாறு இளைஞருக் கினியசெய்வோன்.*

*அரசுதன் சேவைதன்னி லர்ப்பணிப் பதிகநேர்மை*
*சிரசினில் கொண்டுசேவை செய்துபல் நீதிமன்றில்*
*பிரபல உரைபெயர்ப்பில் பிறிதெவர் நிகரற்றோங்கி*
*அரசநம் பிக்கையாளர் திணைக்களத் தாட்சிசெய்தோன்.*

*மூத்தநற் சட்டவாதி மாமனி தன்குமாரே*
*நாத்தழும் பேறவாதிட் டமர்செய வைத்தநம்பி*
*காத்திருந் தயர்ந்தபெற்றோர் களிப்புறச் சிறார்மீதக்கால்*
*சாத்திய குற்றச்சாட்டைத் தகர்த்தெறி சமர்த்தனன்றோ.*

*உடனலம் குன்றுகாலை உளபலம் குறைவுறாது*
*திடமன உறுதியோடு திறம்படப் பணிசெய்மேலோன்*
*மடக்கொடி நோய்வாயுற்ற மனைவியைப் பரிவோடன்பாய்*
*நடத்திமிக் கோம்பிச்சேவை நயம்பட வாற்றினானால்.*

*இனமது தமிழர்க்கெங்கோ ரின்னலென் றறிந்தகாலை*
*சினமுறு வேங்கையொத்துச் சடுதியி லவிடமேவி*
*சனநல முறைமைமீறா தவரவர் குறைகளாய்ந்து*
*இனநல அமைதிபேணி இனியன இயற்றும்வல்லான்.*

*தமிழ்க்காங் கிரசுக்கட்சித் தலைமையைப் பின்னர்தாங்கி*
*தமிழருக் கீந்தசேவை நீட்டிய சைம்மாற்றேபோல்*
*தமிழரைப் பிரதிசெய்ய ஆள்சபை எம்பீயானான்*
*தமிழரைக் காக்குஞ்சேனைக் குறுதுணை யாகவேதான்.*

*எழுபது அகவைதானே மேலும்பல் லாண்டுகாலம்*
*முழுமையாய் பணிகளாற்ற முருகவே ளருளுண்டீங்கு*
*இழுபறி நிலையிலுள்ள உரிமைகள் யாவும்வென்று*
*செழுமையே தமிழர்வாழ்தல் காணநீர் நீடுவாழி!*

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**ஸ்ரீ வள்ளி அம்மன் ஆலய தர்மகர்த்தா**

***SRI VALLI AMMAN KOVIL TRUSTEE***

கலை ஆபரண கோட்டை வீதி, கைதடி, நாவற்குழி

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி
பொ.சண்முகலிங்கம் (அறங்காவலர்)
கைதடி வடக்கு, கைதடி

Address: P.Sanmugalingam
Kaithayd North,
Kaithady.

Reg. No. HA/5/JA/822

# மறவன்புலோ, கைதடி நாவற்குழி, ஸ்ரீ வள்ளியம்மன் ஆலய அறங்காவல் சபையினரின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தின் நெல்வயல் நிறைந்த பிரதேசமான மறவன் புலோவில் பழம் பெருமையும் புகழும் சிறப்பும் பெற்றுத்திகழ்ந்த ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயம் அதி உயர் பாதுகாப்பு வலயத்துள், அடக்கப்பட்டு அடியார்கள் சென்று வழிபட அனுமதி மறுக்கப்பட்டு, அனைவரும் கவலையுற்று இருந்த பொழுது ஆலயப் புனரமைப்புக்கு நிதி வழங்கி அங்கு சென்று புனரமைப்புச் செய்து பூசைகள் ஆரம்பிக்க உதவிகள் புரிந்த பொன் மனச் செம்மல் மக்கள் தொண்டர், பாராளுமன்ற உறுப்பினர், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஐயா, அவர்களை நாங்கள் நன்றியுணர்வுடன் வாழ்த்துகிறோம்.

19.12.2003 இல் அகவை எழுபதைத் தாண்டி 71இல் காலடி வைக்கும் இந் நன்னாளில் ஸ்ரீ வள்ளி அம்பாள் அவருக்கு எல்லா நலனையும் வழங்கி இன்னும் பல்லாண்டு காலம் மக்கள் சேவையைத் தொடர அருள் பாலிக்க வேண்டுமென, வாழ்த்தி வணங்குகின்றோம்.

இவ்வண்ணம்
**Dr.** பொ. சண்முகரத்தினம் - **J.P.**
அறங்காவற்சபைத் தலைவர்
மறவன்புலோ -
கைதடி, நாவற்குழி,
கைதடி.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள்...

"அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்து சொல் பூன்றிய தூண்"

இது செந்நாப்புலவர் செப்பிய குறளாகும்.

அன்பு ஒப்பரவு வாய்மை முதலிய குணங்கள் பெருமையைத்தாங்கி நிற்கும் அணிகலன்களாம் என்கிறார் திருவள்ளுவப் பெருந்தகை. இப்படிப்பட்ட பெருமைக்குரியவராகி மானிடம், மனுநீதி, மக்கட் பண்பு ஆகியவற்றை தம்மகத்தே கொண்டு வாழ்பவர்களே மாந்தருள் மாணிக்கமாக மதிக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே மானிட வாழ்விலே மக்கள் மத்தியில் மாண்புடன் வாழ்ந்து வருபவரே பெருமதிப்புக்குரிய கௌரவ. அ. விநாயகமூர்த்தி அவர்களாவார்.

1933ம் ஆண்டு டிசெம்பர்மாதம் 19ம் திகதி சரசாலையிலே காலஞ்சென்ற திரு. திருமதி அப்பாத்துரை யோகம்மா தம்பதிகளிற்கு இளைய மகனாகவும் திரு. நடராஜா அவர்களுக்கு இளைய சகோதரராகவும் பிறந்தவரே திரு. விநாயகமூர்த்தி அவர்கள். அவர் சிறு வயதாக இருக்கும்போதே அவரது வாழ்வில் விதி விளையாடத் தொடங்கியது.

1936ம் ஆண்டு மழலை மொழி மறவாத மண்விளையாடும் வயதாகிய 3 வயதினிலேயே தனது தாயை இழந்தார். தந்தையாருடைய அன்புடனும் பேரனாருடைய அரவணைப்பிலுமே வாழ்ந்து வந்தார். பின்னைய காலங்களில் இவருடைய சிறிய தந்தையார் சிவபாதசுந்தரம் பிள்ளை, மாமனார் சிதம்பரநாதன் அவர்களுடைய ஆறுதல் ஓரளவு கிடைக்கப் பெற்றார்,

சிறுவயதுக்கல்வியை சரசாலை சரஸ்வதி வித்தியாசாலையில் கற்ற இவர் 1942ம் ஆண்டு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சேர்ந்து சிரேஷ்ட கல்விச் சான்றிதழ் (S.S.C) வரை கற்று 1950ம் ஆண்டு மார்கழி மாதம் அப்பரீட்சையில் சித்தியெய்தினார். அதனைத் தொடர்ந்து சிறிது காலம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றினார்.

1952ம் ஆண்டளவில் சிலாபம் ஆனந்தாக்கல்லூரியில் ஆசிரிய நியமனம் கிடைக்கப்பெற்று அங்கு சென்று கணிதம், குடியியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பித்துக்கொண்டிருந்தார். அங்கு ஆசிரியராக இருந்தபோது இலங்கை வங்கி வெளிநாட்டுப் பிரிவில் (Bank of Ceylon Foreign Department) ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்று சில மாதங்கள் அங்கு பணியாற்றினார். அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் போது 1953ல் இவரை அரவணைத்து வளர்த்து வந்த பேரனார் கந்தையா அவர்களும் காலமாகியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்று வாழ்ந்து வந்தார். அப்போது நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் தேர்வுப் பரீட்சையில் சித்தி பெற்று 01.09.1953இல் அரச எழுதுவினைஞராக நிரந்தர நியமனம் பெற்று நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தனது நிரந்தர அரசசேவையை ஆரம்பித்தார். அங்கு சேவையில் இருக்கும் போது 01.10.1953இல் இடமாற்றம் கிடைக்கப்பெற்று களுத்துறை நீதிவான் நீதிமன்றில் தனது சேவையைத் தொடர்ந்தார்.

களுத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது 1958ம் ஆண்டு பேரினவாதிகளால் நடாத்தப்பட்ட இனக்கலவரத்தில் இவரும், இவருடைய சக தமிழ் அலுவலர்களும் அகப் பட நேர்ந்தது. அந்தக் கலவரத்தில் இவருடன் கூட எழுதுவினைஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த திரு. விஸ்வலிங்கம் அவர்கள் களுத்துறை முருகன் கோவில் பகுதியில் வைத்து

அடித்துக் கொலை செய்யப்பட்டார். அதனைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து உணர்வுகள் பொங்க துடித்தெழுந்த இவர் மற்றைய சக ஊழியர்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற உதவிகளுடன் பிரேத பேழை வாங்கி களுத்துறை மயானத்துக்கு கொண்டு சென்று கற்பூரம் எரித்துவிட்டு தனது கைக்குட்டையால் தீ மூட்டி விஸ்வலிங்கம் அவர்களிற்குச் செய்து வைத்த இறுதிச்சடங்குதனை, அந்த சம்பவத்தை அறிந்த எவரும் மானிட வாழ்வில் என்றுமே மறந்து விட முடியாது. தான் சார்ந்த இனம்படும் துன்பத்தைப் பார்க்க பொறுக்காது வீறுடன் எழுந்த இவர் கலவர நேரமாக இருந்த பொழுதிலும் தனக்கு எதுவும் நடக்கலாம் என்பதைப் பற்றி எதுவுமே நினையாது சமூகத்தில் தனக்குள்ள கடமையை நிறைவேற்றும் பண்புகொண்டவராக அந்த நேரத்திலேயே விளங்கினார்.

1959ம் ஆண்டு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா தையல்நாயகி அவர்களைத் திருமணம் செய்து கொக்குவிலில் தம்பதியர் வசித்து வந்தனர். பின்பு கொழும்பிற்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்று கொழும்பில் சேவையாற்றிக் கொண்டிருக்கையில் இவருடைய தந்தையார் நோய்வாய்ப்பட்டிருந்தார். அத்தருணத்தில் ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் யாழ்ப்பாணம் வந்து தனது தந்தையைப் பராமரித்து ஆதரித்து ஆறுதல் கூறிய சம்பவமானது ஒரு பிள்ளை தன்னைப் பெற்ற தெய்வங்களிற்கு இந்த உலகத்திலே செய்யும் மாபெரும் கைங்கரியத்திற்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளதென்றால் அது மிகையாகாது.

1974ம் ஆண்டு இவரது தகப்பனாரும் காலமானார். சிறுவயதில் தாயை இழந்தும், இளம் வயதில் தந்தையை இழந்தும் இருந்த இவர், மனதில் உள்ள உறுதியான திடத்தினை மட்டும் இழந்துவிடாது தனது முயற்சிகளினால் முன்னேறி சட்டத்துறையில் ஒரு சரித்திரம் படைத்து இன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினராகி உயர்ந்து நிற்பதை, அவருடைய வாழ்க்கையின் வடிவத்தைப் பார்க்கும்பொழுது,

**"தெய்வத்தானா காதெனினும் முயற்சிதன்**
**மெய் வருத்தக் கூலி தரும்"**

எனும் திருவள்ளுவருடைய வாய்மொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது.

திரு. விநாயகமூர்த்தி அவர்கள் சட்டத்துறையில் ஆர்வம் கொண்டிருந்த காரணத்தினால் சட்டத்துறையின்பால் அவரது கவனம் ஈர்க்கப்பட்டது. 1980ம் ஆண்டில் சட்டமாணிக் கல்வியை ஆரம்பித்த இவர் 1983ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டப்பட்டதாரி (LL.B) ஆனார். தொடர்ந்து இலங்கை சட்டக்கல்லூரி பரீட்சையிலும் சித்திபெற்று 18.10.1985இல் இலங்கை உச்சநீதிமன்றில் சத்தியபிரமாணம் செய்து ஒரு சட்டத்தரணியானார். அந்தக்காலமே தமிழினத்தின் உரிமைப் போராட்டம் எழுச்சி கொண்டு வலுவடையத் தொடங்கியிருந்த காலமாகும். தன்னுடைய தார்மீகப் பொறுப்பு வாய்ந்த கடமை இனிமேற்தான் என்று எண்ணியிருப்பார் போலும், யாழ்ப்பாணம், மல்லாகம் நீதிமன்றங்களிலும், ஆட்பதிவுத்திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் கொழும்பில் வேறு சில திணைக்களங்களிலும் பணியாற்றிய இவர் இறுதியாக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவில் 9 வருடங்கள் சேவையாற்றி 01.05.1986இல் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

தனது சட்டத்தரணிப்பணியை மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுடன் சேர்ந்து ஆரம்பித்துக் கொண்ட இவர் சட்டத்துறையிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்தத் தொடங்கினார். பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகால விதிகள் ஆகிய இரண்டு கொடிய சட்டங்களால் எந்தவித காரணங்களுமின்றித் தமிழர்கள் வகை தொகையாக கைது செய்யப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டனர். அந்தநேரத்தில் இருந்தே ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறைச்சாலைகளுக்குச் சென்று அந்தக் கைதிகளுக்கு ஆறுதல் கூறியும் சட்ட அபயமளித்தும் அவர்களிற்காக நீதிமன்றங்களில் வாதிட்டும் வந்த இவர் இன்றும் அப்பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். இன்னும் தன்னால் இயன்றவரை இப்பணியைத் தொடருவேன் என



2002ம் ஆண்டு பாராளுமன்றப்
பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றபோது
கொக்குவிலில் உள்ள அவரது
இல்லத்தில் உறவினர்களுடன்



2002ம் ஆண்டு பாராளுமன்றப்
பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு
வந்தபோது அவருடைய இல்லத்தில்
உறவினர்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு
நிகழ்வில்...



கொழும்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில்
தனது பாசமிகு துணைவியாருடன்...



யாழ் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர் நிகழ்வில் பிரதம விருந்தினராக...



பொது வைபவமொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போது...



ஆசிரியர் தினத்தில், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில்...



யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் யாழ். பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர் முதலியோருடனான அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய கூட்டத்தில்.....




பொங்கு தமிழ் நிகழ்வு 2002ல், கொக்குவிலில் இருந்து புறப்பட்ட பேரணிக்குச் சக பாராளுமன்ற உறுப்பினருடன் தலைமை தாங்கி அழைத்துச் செல்கையில்,,,



கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில்
வருடாந்த மஹோற்ஸவத்தில் தீர்த்தத் திருவிழாவில் உபயகாரர் அவர்கள்...

உறுதியாகவுள்ளார். தான் சார்ந்த இனத்துக்காக தன் இனத்தின் உன்னத விடுதலைக்காக தனது உடல், பொருள் அத்தனையும் அர்ப்பணித்து பணியாற்றிக் கொண்டுவரும் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் அந்தக் காலத்தில் இருந்தே சட்டத்தரணிப் பணியை ஓர் உழைப்பாகக் கருதாமல் ஒரு புனிதத் தொண்டாகவே கருதி இன்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு இருக்கிறார்.

இப்பொழுது இலங்கை உச்சநீதிமன்ற பிரதம நீதியரசராக இருக்கும் கௌரவ சரத். என். சில்வா அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தலைமை நீதியரசாக இருந்தபோது 1993/1994ம் ஆண்டு காலப்பகுதியில் அதிகூடிய எண்ணிக்கையான ஆட்கொணர்வு மனுக்களை (Habeas Corpus) தாக்கல் செய்து வழக்குகள் நடாத்திய சட்டத்தரணி இவரேயாவர். அந்த நேரத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இவருடைய 5 அல்லது 6 வழக்குகள் தினமும் கூப்பிடப்பட்டு வந்தன. அதேபோல 1998/1999ம் ஆண்டு காலப்பகுதியில் ஆகக்கூடிய எண்ணிக்கையான அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் (Fundamental Rights Application) தாக்கல் செய்து வழக்குகள் நடாத்திய சட்டத்தரணி என்ற பெருமையும் இவரையே சாரும்.

1993ம் ஆண்டு குற்றத் தடுப்புப் பிரிவு பொலிசாரினால் (C.I.D) கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த விஜயன் விமலேந்திரன் அவர்களது சார்பாக சில நிர்ப்பந்தங்களால் தானே மனுதாரராக திரு. விநாயகமூர்த்தி அவர்கள் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில் சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துப் பலசட்டநுணுக்கங்களை எடுத்துக்காட்டி மனிதஉரிமை மீறல் இடம்பெற்றுள்ள தென்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்து வாதாடியிருந்தார். அந்த வழக்கின் இறுதியில் நீதியரசர்களான கௌரவ. கலாநிதி. ஏ. ஆர். பி. அமரசிங்க, கௌரவ விஜயதுங்க கௌரவ ஆனந்தக்குமாரசுவாமி ஆகியோர்; "இந்நாட்டிலே ஒருவர் எதிர்காலத்திலே குற்றம் புரியப்போகிறார் என்ற சாட்டுதலின் பேரில் முதலிலேயே அவரைக் கைது செய்ய முடியாது அப்படியான கைது சட்டத்திற்கு முரணானது" என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் சட்டத்துறையில் முன்னுதாரணமாகவும், எடுத்துக்காட்டவும் அமையும் தீர்ப்பினை வழங்கி பாதிக்கப்பட்டவரின் அடிப்படை மனித உரிமைகள் வெகுவாக மீறப்பட்டுள்ளன என்பதையும் ஏற்றுக் கொண்டு கணிசமான தொகை நட்டஈடாக வழங்குவதற்கும் உத்தரவிட்டிருந்தனர். 1997ம் ஆண்டு இலங்கை சட்டஅறிக்கையில் (1997/I/SLR) வெளியிடப்பட்ட அவ்வழக்கானது இப்பொழுது இலங்கை சட்டக்கல்லூரியில் அரசியல் அமைப்புப் பாடவிதானத்தில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தில் மிக முக்கியமானதொரு வழக்காகக் [Case law] கற்பிக்கப்படுகின்றது. மற்றும் நாகமணி தெய்வேந்திரம் என்பவருடைய சார்பில் இவர் உச்சநீதிமன்றில் தாக்கல் செய்து மனுதாரர் சார்பில் ஆஜராகிய மேன்முறையீட்டு வழக்கொன்றில் "ஒரு சந்தேகநபருடைய குற்றஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை மட்டும் வைத்து அவரைக் குற்றவாளியாகக் காணமுடியாது" என்ற சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பினை நீதியரசர்களான கௌரவ மார்க் பெர்னான்டோ, கௌரவ சி. க. விக்னேஸ்வரன், கௌரவ அமீர் இஸ்மெயில் ஆகியோர் வழங்கியிருந்தனர். இத்தீர்ப்பின் முக்கியத்துவம் யாதெனில், பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் மீது அவர்களிடமிருந்து பலவந்தமாகத் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டும் வைத்தே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அத்தகைய செயற்பாட்டிற்கு இத்தீர்ப்பினால் ஒரு சாவு மணி அடிக்கப்பட்டது.

சட்டத்துறையிலே திரு. விநாயகமூர்த்தி அவர்கள் சரித்திரம் படைத்திருப்பதை எடுத்துக்காட்டுவதற்கு இவ்விருவழக்குகளுமே சான்றுபகரப் போதுமானவை ஆகும். தனது உடல்நிலை இயலாதபோதும் தமிழ் மக்களிற்கான சேவையை பெரிது என நினைத்த அவர் 2000ம் ஆண்டு தனது காலில் மேற்கொள்ளப்பட்ட பெரியதொரு சத்திரசிகிச்சையின் காரணமாக ஊன்று கோலின் உதவியுடன் உச்சநீதி மன்றத்தில் எழுந்து நின்று விவாதிக்கமுற்பட்டபோது அத்தருணம் நீதிமன்றில் தலைமை நீதியரசராக இருந்த முன்னாள் பிரதம நீதியரசர்.ஜி.பி.எஸ்.டி. சில்வா அவர்கள் நீங்கள் இருந்தவாறே உங்கள்வாதத்தை

முன்வையுங்கள் என்று தானாகவே அனுமதியளித்தார். இதிலிருந்து திரு. விநாயகமூர்த்தி அவர்கள் எவ்வளவு அர்ப்பணிப்புடன் தனது சட்டத்தரணிப் பணியை மேற்கொண்டு வந்துள்ளார் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது.

இவர், பயங்கரவாதத் தடைச்சட்டத்திலும் அடிப்படை மனித உரிமைகள் சட்டத்திலும் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்று ஒரு சட்டநிபுணராகத் திகழ்கிறார் என்றால் அது மிகையாகாது. அவர் தனது சட்டத்தரணிப் பணியில் சகல இனம், மதம், கட்சி, மொழிகளைச் சார்ந்தவர்களிற்காகவும் நீதிமன்றங்களில் அவர்கள் சார்பில் ஆஜராகிச் செய்த வாதங்களும் செய்த உதவிகளும் அவரது இன, மத, மொழி, கட்சி வேறுபாடு இன்றித் தொழிற்படும் பெருந்தன்மையையும் சேவை மனப்பான்மையையும் எடுத்துக்காட்டுகின்றன.

உண்மையான நீதிக்கும், ஏழை மக்களிற்கும் மொத்தத்தில் அல்லற்படும் தமிழினத்திற்கும் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்து வந்திருக்கும் திரு. விநாயகமூர்த்தி அவர்களுடைய சட்டத்துறை சார்ந்த சாதனைகளும் சேவைகளும் இன்னும் இந்த நாட்டிலே தொடர்வதற்கு இறைவன் அவரை ஆசீர்வதிக்க வேண்டும்.

1947ம் ஆண்டிலேயே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த இவர் பின்னர் மத்திய குழு உறுப்பினராகவும் செயற்பட்டுவந்தார். எழுவினைஞராகப்பணியாற்றிக் கொண்டிருந்த போது 1965ம் ஆண்டிலிருந்து அரச எழுது சேவையாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்திற்கு 15வருடங்கள் தலைவராக இருந்தார். அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சிலர் பதவிக்காகவும் அரசியல் இலாபத்திற்காகவும் வேறு கட்சிகளை நாடிச் சென்றபோதும் உண்மையான கட்சிப்பற்றுடனும் அரசியல் கொள்கைகளுடனும் தான் சார்ந்த கட்சியை வளர்த்தெடுப்பதில் வலுவாகப் பாடுபட்டார்.

2000ம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ் மக்களின் குரலாக ஒலித்த குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவிற்குப்பின் பெப்ரவரி மாதத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். சிறுவயதிலிருந்தே கட்சிக்காகப்பாடுபட்டு உழைத்துவந்த இவர் கட்சியின் தலைமைப் பதவியை அடைந்த பின் அ. இ. த. கா. கட்சி ஒரு புத்துணர்ச்சியுடன் எழுந்தது.

2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் அ.இ.த.கா. கட்சியின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவருக்குக் கிடைத்த அவ்வெற்றி தமிழ் மக்களின் அரசியல் போராட்டப்பாதையில் கிட்டிய ஒரு மைல்க்கல்லும், அ.இ.த.கா.கட்சி 3 தசாப்தங்களிற்கு பின்பு அடைந்த மறுமலர்ச்சியுமாகும்.

06.12.2000 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன விவாதத்தில் இவர் ஆற்றிய உரையை அரசியல் ஆர்வலர்கள் எவரும் மறந்து விடமாட்டார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகாலவிதிகள் என்பவற்றைக் கடுமையாக ஆட்சேபித்துப் பேசியதுடன், இந்த நாட்டிலே சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும், அனுமதி மறுக்கப்பட்டால் பிரிவினை தான் ஒரே வழி என்று வீரமுழக்கம் செய்தார். அந்த உரையினை ஒரு பத்திரிகை "நாம் கேட்பது சம உரிமை மறுக்கப்பட்டால் பிரிவினை தான் - பாராளுமன்றில் விநாயகமூர்த்தி வீரமுழக்கம்" என்ற தலைப்பில் முழுமையாகப் பிரசுரித்திருந்தது. இன்னுமொரு பாராளுமன்ற அமர்விலே முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சருடன் ஏற்பட்ட குறுக்கு விவாதத்தில் "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் எதற்கும் நாம் தயார்" என்று ஆளும் தரப்பினைப் பார்த்து சவால் விடுத்தார். "சமாதான முன்னெடுப்புக்கள் சரிவராது போனால் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதைத் தவிர தமிழ் மக்களிற்கு வேறுவழியே இல்லை" எனத் துணிச்சலுடன் கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் தான், அவர்களுடன் பேசுவதன் மூலமே இந்த நாட்டிலே ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற ஜதார்த்த அரசியல்வாதத்தை

முதன்முதலில் பாராளுமன்றத்தில் வெகு ஆணித்தரமாகவும் துணிச்சலுடனும் எடுத்துரைத்தார். பயங்கரவாதத் தடைச்சட்டம் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் அவசரகால விதிகள் மீளப் பின்வாங்கப்பட வேண்டுமெனவும் தனது வீரம் செறிந்த வாதங்களால் அழுத்தம் கொடுத்து வந்தார். அதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக ஒரு தனிநபர் பிரேரணையையும் கொண்டு வந்து பாராளுமன்றில் சமர்பித்து அதனை விவாதத்திற்கு விடவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

10.10.2001 அன்று பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முதல் நாள் அவசரகாலவிதிகள் வலுவிழந்து காணப்பட்ட நிலையிலே, புலிகளைத் தடைசெய்யவென ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட சில பிரமாணங்கள், அரச தரப்பினால் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போது, அதைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 27ம் பிரிவின் கீழ் கொண்டுவந்து ஒப்பேற்றமுடியாது என்ற சட்டசர்ச்சையை எழுப்பி கடுமையான ஆட்சேபனையை முன்வைத்து வாதிட்டார். அந்த நேரம் அதை எதிர்த்துப் பேசிய ஒரே ஒரு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினராகிய இவர் அதனை வாக்கெடுப்பிற்கு விடவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார். அப்போது முஸ்லிம் காங்கிரஸை சார்ந்தவர்களும் இவரது வாதத்தையும், சட்ட ஆட்சேபனையையும் ஏற்று அந்த பிரமாணங்களின் அங்கீகாரத்திற்கு எதிர்த்து வாக்களித்திருந்தனர். ஆனால் துர்ரதிஷ்டம் ஐ.தே.கட்சியினர் வெளிநடப்புச் செய்தமையால் 74-19 என்ற ரீதியில் அதற்கு அங்கிகாரம் கிடைத்தது. அந்தத்தருணம் உச்சநீதிமன்றமாயிருந்திருந்தால் இவரது சட்டத்துறை சார்ந்த வாதம் வெற்றி பெற்றிருக்கும். ஆனால் பாராளுமன்றம் ஜனநாயக முறைப்படி நடப்பதால் வாக்கெடுப்பு முறையினால் அந்தப்பிரமாணங்களிற்கு அங்கீகாரம் வழங்கப்பெற்றது.

05.12.2001 அன்று நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக்கட்டமைப்பில் அ. இ.த.கா.கட்சியின் சார்பில் போட்டியிட்டு மக்களின் வரவேற்பைப் பெற்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும்போது 25.05.2002 அன்று இவர் மிகுந்த அன்போடும் பாசத்தோடும் அரவணைத்துவந்த இவரது துணைவியார் திருமதி. வி. தையல்நாயகி அவர்கள் இறைவனடி சேர்ந்தார். அந்தப் பிரிவினால் ஆழ்ந்த சோகமடைந்திருந்த இவர் நாளடைவில் உறவினர்களின் ஆறுதலால் சற்றுத் தேற்றமடைந்தார்.

யாழ்ப்பாணத்திலே இவர் வசித்துவரும் கொக்குவிலில் உள்ள மாத்தனைக் கந்தசுவாமி கோவிலின் பரிபாலன சபையின் முன்னாள் செயலாளராகவும் தற்போது உபதலைவராகவும் இருக்கும் இவர் 1965ம் ஆண்டில் இருந்து அந்த ஆலயத்தின் தீர்த்த உற்ஸவத்தைத் தொடர்ந்தும் செய்து வருகிறார். இவருடைய வெற்றிகளிற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் நல்ல வளமான வாழ்விற்கும் மாத்தனை முருகனது அருட்கிருபை தான் காரணம் என்பதே தெய்வீகத்தின் பால் ஐதார்த்தமாகும்.

ஏறக்குறைய 3 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் தன்னுடைய 70 அகவைகளிற்கிடையில் அரசாங்க சேவையிலும் சட்டத்தரணிப் பணியிலும் 52வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கிறார். உண்மை பேசுவதையும் நேர்மையாக நடப்பதையும் தான் இந்த உலகத்தில் இறுக்கமாகப் பின்பற்றிய இவர் நாட்டிற்காகவும் மக்களிற்காகவும் ஆற்றிய தொண்டுகள் நானிலம் போற்றும் நாயகனிற்கு என்றென்றும் நல்வாழ்த்துக் கூறிநிற்கும்.

19.12.2003 அன்று தனது 70வது அகவையைப் பூர்த்தி செய்யும் திரு. விநாயகமூர்த்தி அவர்களின் சகல சேவைகளும் இன்னும் தமிழ் மக்களிற்குக் கிடைக்கவேண்டும், இன்னும் பல்லாண்டு காலம் அவர் நீடூழி வாழ வேண்டும், அதற்கு இறைவன் தன் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும். நாம் எல்லோரும் அவருடைய நீண்ட ஆயுளிற்கும் வளமான வாழ்விற்குமாக இறைவனை வேண்டிநிற்போம்.

*"நீதி உயர்ந்தமதி கல்வி அன்பு*
*நிறைய உடையவர்கள் மேலோர்"*

–பாரதி–

Mudaliyar Valavu
Mathanai Lane,
Kokuvil East
Kokuvil
Jaffna-40000
T.P 021-3249

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

**A.VINAYAGAMOORTHY LL.B**
Member of Parliament-Jaffna Dist.
And Attorney - at - Law,
270/4, Thimbirigasyaya Road,
Colombo-05.
Sri Lanka.
T.P: 559041

The Honourable Speaker,

The President has sought by regulation framed under Section 27 of the Prevention of Terrorism Act No.48 of 1979 which was published in Government Gazette No.1191/12-2001 of 4.7.2001 to proscribe the Liberation of Tigers of Tamil Eelam.

What she has done now amounts to amending Section 30 of the Prevention of Terrorism (Temporary provisions) Act No.48 of 1979. Section 30 the Prevention of Terrorism Act states "The Proscribing of Liberation Tigers of Tamil Eelam and similar organizations law No.16 of 1978 is hereby repealed". Only parliament can amend the Prevention of Terrorism Act. The President who is the Minister of Defence cannot amend a provision in the Principal Enactment by framing a regulation under Section 27 of the Prevention of Terrorism Act. She has usurped the powers of the Parliament in trying to amend a section of the Principal Enactment by framing a regulation under the Prevention of Terrorism Act. If the banning of L.T.T.E. under the Prevention of Terrorism Act to be valid and legal an amendment has to be brought to Section 30 the Prevention Terrorism Act in Parliament and passed. Then only it can be legal and valid.

Originally The Liberation Tigers of Tamil Eelam was banned by law No.16 of 1978. This ban was removed by Section 30 the Prevention of Terrorism Act No.48 of 1979. Later L.T.T.E. was banned by Emergency Regulation in 1998. After the lapse of the Emergency Regulations on 4.7.2001 the ban was removed.

Since the ban imposed by the President in her capacity as Minister of Defence through a Regulation framed under Section 27 of the Prevention of Terrorism Act is illegal and invalid the L.T.T.E. remains unbanned.

The so called ban imposed by the President will not have any legal effect and the Security forces should be made aware of the actual legal position now. They should know that the L.T.T.E. remains unbanned.

The only way L.T.T.E. can be banned through Prevention of Terrorism Act is to bring an amendment to the Prevention of Terrorism Act in Parliament and get it passed by Parliament. Until then L.T.T.E remains unbanned.

In this instance I find that the President has not been properly advised and as a result she has done something which amounts to usurping the powers of the Parliament.

The regulation is also bad as it is ultravires the main Act. The main Act does not contemplate banning of any organizations.

**Appathuray Vinayagamoorthy**
*Member of Parliament,*
*Jaffna District.*

Note:- The speech made by Hon.A.Vinayagamoorthy (M.P.) on the eve of the dissolution of Parliament on 10th of October 2001, opposing the regulations framed by the President under Section 27th of P.T.A banning the L.T.T.E and submitted for Parliament approval.

"All human beings are born free and equal in dignity and rights."

Mudaliyar Valavu
Mathanai Lane,
Kokuvil East
Kokuvil
Jaffna-40000
T.P 021-3249

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

**A.VINAYAGAMOORTHY LL.B**
Member of Parliament-Jaffna Dist.
Attorney - at – Law,
270/4, Thimbirigasyaya Road,
Colombo-05.
Sri Lanka.
T.P: 559041
FAX: 01-590453

The Honourable Speaker,

Dear Sir,

I intend moving the following motion on a private members day in the Parliament.

This house is of opinion that the Prevention of Terrorism (Temporary provisions) Act No.48 of 1979 as amended by Act No.10 of 1982 and Act No.22 of 1988 be repealed or removed from the statute book mainly for the following reasons:

1) We have not achieved the purpose for which this act was introduced.
2) It has been counter productive
3) It has been the cause for serious Human Rights violation in this country.
4) The Police Officers are misusing the wide powers given to them by this act.

**Appapathuray Vinayagamoorthy**
*Member of Parliament,*
*Jaffna District.*

Note: A Motion to repeal the Prevention of Terrorism Act was submitted to the 2000/ 2001 Parliament by Hon.A.Vinayagamoorthy (M.P) and since it was not taken up, it was resubmitted by him on the first day of the 2002 Parliament and ultimately the motion was taken up for debate and he spoke on that.
The resubmitted adjournment motion is given above.

## எமது உள்ளத்திலிருந்து.......

கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள்

52 வருடங்கள் ஆற்றிய மக்கள் சேவையைக் கௌரவிக்கும் முகமாக

அவரது 70வது அகவை நிறைவுநாளன்று எம்மால் வெளியிடப்படுகின்ற

இப்பாராட்டு விழா வாழ்த்து மலரிற்கு ஆசிச் செய்திகள் வழங்கிய சமயப்

பெரியோர்களிற்கும், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பிரமுகர்களிற்கும்,

இவ்வாழ்த்து மலரினை அழகுற அச்சிட்டு உதவிய


யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினருக்கும், மற்றும் இம்மலரினை

வெளியிடுவதிலும் விழாவினை நடாத்துவதிலும்

பலவழிகளிலும் உதவி புரிந்த

அனைவருக்கும்

எமது மனமார்ந்த நன்றிகள்!



உ

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவரும்
சிரேஷ்ட சட்டத்தரணியும் சட்டப் பட்டதாரியுமான
**திருமிகு அப்பாத்துரை விநாயகமூர்த்தி** அவர்கள்
பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000 இல்
யாழ் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராகத்
தெரிவு செய்யப்பட்டமைக்காக அவரை
வாழ்த்திப் பாராட்டி அவரது உறவினர்களால் வழங்கப் பெற்ற

## வாழ்த்துப் பாமாலை

சீரோங்கும் தமிழீழம் சிறப்பும் மேவும்
சிற்றூராம் சரசாலை சான்று சொல்லும்
பேரோங்கும் அப்பாத்து ரையோகம்மா
பேறே பேரன்பன்வி நாயகமூர்த்தி
ஊரோங்கும் கொக்குவிலில் ஒன்று கூடி
உறவினிலே தையல்நா யகியைச் சேர்ந்தான்
பாரோங்கப் பாராளுமன்றம் தன்னில்
பரந்து தமிழ் ஒளிவீசி வாழி! வாழி!

சிந்தைமிகு நல்லெண்ணம் சிரமேற் கொண்டு
சிறந்தசட்ட வாதியாக நீதிமன்றில்
விந்தைபுரி விநாயக மூர்த்தி அன்பன்
விவேகமுடன் வழக்குகளில் வாதம்செய்து
முந்தையர்போல் மும்மொழியில் வீரம்பேசி
முத்திரையைப் பதித்தனனே சரித்திரத்தில்
சிந்தையிலே தமிழறத்தைக் கொண்டசெம்மல்
சிதம்பரனின் அருள்பெற்று வாழி! வாழி!

இன்தமிழின் இனிமையைப்போல் இனிது வாழி!
ஈழந்தன் உரிமையினை இனிது பேசி
மன்னவனாய் மகிமையுடன் வாழி! வாழி!
மாத்தனையில் பூத்தவனின் அருளும் கூடி
தன்மானம் தழைத்தோங்க நீடுவாழி
தகைமையுறு தமிழ்ச்சட்டத் தரணி வாழி!
உன்மானம் உயர்ந்தோங்க ஓங்கிவாழி!
உருத்திரனின் அருள் பெற்று வாழி! வாழி!

சுபம் !

12-10-2000

அன்புடன் இனிதே வாழ்த்தும்
உறவினர்கள்
கொக்குவில்

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. COLOMBO-13. TEL: 2330195